போன் நெ. [illegible] [illegible]

# திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

| மலர் 13 | 24—4—55 | இதழ் 42 |
| --- | --- | --- |




14-ம் லூயி

(அரசாண்ட ஆண்டு)

# எதை எல்லாமோ அழிக்கிறோமாம்!

# அதை அழிக்கவில்லையாம்!

பண்டு, தமிழ்ப் புலவர்களுக்குத் தான் எங்கும்—எப்பொழுதும் முதலிடம் அளிக்கப்பட்டது—இது பழைய வரலாறுகளில் நாம் காணும் ஒரு உண்மை. சேர, சோழ பாண்டிய மன்னர்கள், தமிழ்ப் புலவர் பெருமக்களுக்குத் தனி மதிப்பு அளித்துத், தமிழ் மொழியின் தனிப்பெருஞ் சிறப்பை அனைவரும் அறியும்படி செய்தனர்.

அன்றும் இன்றுபோல் சமயப் பற்று இருந்ததென்ற போதிலும், அவர்கள் தமிழைத் தம் உயிரென மதித்தனர். ஆனால், இன்று மதமே தம் உயிராக மதிக்கும் மந்த மதியினரே பெருமளவில் காணப்படுகின்றனர். இதனால், தமிழ் மொழியின் தனிப்பெருஞ் சிறப்பை அறிந்து போற்ற முடியாத நிலைக்குப் பெரும்பான்மை தமிழ் மக்கள் இலக்காகி விட்டனர்.

பிற மொழிகளின் கலப்பில்லாமல் தமிழ்மொழி வளர்ச்சியடைய முடியாதென்று கூறும் பேதைமையினர் பெருகிவிட்டதால் தமிழ், தனக்குரிய இடத்தை இழந்துவிட்டது. செங்கோலோச்ச வேண்டிய செந்தமிழ், சிறைப்பட்டு கிடப்பது போன்ற நிலையை அடைந்துவிட்டது.

**தமிழ் நாட்டில் தமிழே ஆட்சிமொழியாக வேண்டுமென்று கூறுமளவுக்கு—தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனியுமளவுக்குத், தமிழ், தன் நிலையை இழந்து நிற்கிறதென்றால், இதனைவிடத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இழிவு வேறொன்றுண்டோ?**

தமிழ் நாட்டில், தமிழ் ஆட்சி மொழியாக இல்லை—முடியவில்லை! இதனை வெளியே சொன்னால் வெட்கம். நினைத்துப் பார்த்தால் வேதனை. பிறர் அறிந்தால், தமிழ், தனக்குரிய மதிப்பை இழந்துவிடும்.

ஏன் தமிழ் ஆட்சிமொழி ஆகவில்லை—முடியவில்லை?

**தமிழ் ஆட்சி மொழியானால், உடனே "ஸ்ரீ" போய்விடும். "திரு" வந்துவிடும்.**

"ஸ்ரீ" போய் "திரு" வந்துவிட்டால், ஸ்ரீயின் சுற்றச் சார்புகள், பாதுகாவலர்கள், ஸ்ரீயின் நிழல் கிடைத்தால் போதுமென்றிருப்பவர்கள் ஆகிய எல்லோரையும் புண்படுத்துவதாக முடியும் அல்லவா? அதிலும் ஸ்ரீயின் தந்தை முன்னிலையிலேயே திருவின் செல்வன் இந்தக் காரியத்தைச் செய்வது, ஆசிரியனுக்கு மாணவன் செய்யும் பெருங் குற்றம் போலவும், குருவை மதியாத சீடன்போலவும் ஆகும் அல்லவா?

ஸ்ரீயைப பார்க்கிலும், திருவே எந்தக் காரியத்தையும் செயல்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வருவதில் திறமை மிக்கவராய் இருந்தாலும், ஸ்ரீ எங்கே? திரு எங்கே? மடு எங்கே? மலை எங்கே? என்று இன்னமும் எண்ணிக்கொண்டிருப்பவர்களிடம், தமிழ் விரைவில் ஆட்சி மொழியாகிவிடும் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றமே அடைய நேரிடும்.

என்றபோதிலும், தமிழ்ப்பேசும் பெரியவர்கள், தமிழ் நாட்டில் தமிழ் தான் ஆட்சி மொழியாக அமைதல் வேண்டுமென்று உண்மையாகவே எண்ணிச் செயலாற்ற முன்வருவார்களானால், தமிழ் ஆட்சி மொழியாவதைத் தடுக்க எவராலும்—எந்த ஆற்றலாலும் முடியாது.

தமிழ்ப் புலவர்கள் என்றால் பகடி பண்ணி உள்ளூர நகைத்து மகிழும் நிலைமாறி, இப்போது, அவர்களைப் பாராட்டிப் பரிசளித்துப், பொன்னாடை போர்த்தி இன்புறும் நிலை ஏற்பட்டிருக்கும் இந்நாளில், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதற்காகப் பெரிய போராட்டம் எதுவும் நடத்தி வெற்றி காண

★★ அடிகள் ★★

வேண்டுமென்பதில்லை. பாராட்டுதலுக்கு ஆளாகிப், பரிசைப்பெற்றுப், பொன்னாடைக்குள் புகுந்து கொள்பவர்கள், அவை செய்வாரைப் பார்த்து, "ஐயன்மீர்! அடியேன் செய்த தமிழ்த் தொண்டைப் பாராட்டிப், பரிசளித்துப், பொன்னாடை போர்த்தி என்னை மகிழ்விப்பதைவிட, நான் செய்யும் தமிழ்த் தொண்டுக்காக, நீங்கள், தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழியாதல் வேண்டுமென்று அரசினரை, வற்புறுத்தி வெற்றி பெறுவீர்களானால், அதுவே, எனக்கும், என் போன்ற தமிழ்த் தொண்டர்களுக்கும், தமிழ் மொழிக்கும் தாங்கள் செய்யும் பேருதவியாகும்" என்று அறுதியிட்டுக் கூறும் துணிவையும் உறுதியையும் பெற்றுவிடுவார்களானால், தமிழ், தனக்குரிய இடத்தை விரைவில் தானாகவே பெற்றுவிடும்.

நான் இங்ஙனம் கூறுவதை, அண்மையில் பொன்னாடை போர்த்தப்பட்ட தமிழ்ப் பேரறிஞர்கள் மீது குற்றஞ் சாட்டுவதாக எவரும் கருதிவிடக்கூடாது.

தமிழ்ப் புலவர் பெருமக்கள் மற்றவர்களால் பாராட்டப் பட்டுப்புகழ் அடைதல் வேண்டுமென்று நினைப்பவர்களில், முதல் வரிசையில் முதல் ஆளாய் நிற்பவன் யான் என்பதை இங்கே வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். ஆனால், போலியாகப்பொன்னாடைக்குள் நுழைந்து கொண்டு புகழ்பெற விரும்புவர்களைக் கண்ணால் பார்க்கவும் விரும்பாதவன் நான் என்பதையும் கூறி விடுகிறேன்.

அண்மையில் பொன்னாடை போர்த்தப்பட்ட நாவலர் பாரதியார் அவர்களும், சொல்லின் செல்வர் சேது அவர்களும் தமிழுணர்ந்த பேரறிஞர்கள். தமிழின்பத்தை முனையிலிருந்து, மூலவேர் வரை நுகர்ந்து மகிழ்வதில் பேரார்வம் கொண்டவர்கள். தமிழின்பத்தை மற்றவர்களும் அறியும்படி செய்வதில் இணையற்றவர்கள். இப்படிப்பட்ட பேரறிஞர்கள் காலத்திலேயே தமிழ், தனக்குரிய இடத்தைப் பெற்றுவிட வேண்டுமென்பது எனது பெருவிருப்பமே இவ்விதம்

எழுதும்படி செய்ததென்பதை உள்ளொன்றுவையாமல் திறந்து கூறுகிறேன்.

தாங்கள் செய்வதுதான் தமிழ்த் தொண்டு; மற்றவர்கள் செய்வதெல்லாம் தமிழ்த்தொண்டின்பாற் பட்டதாகா என்றெண்ணுபவர் எவராயினும் அவரைக் கண்டிக்காமல், காரியவாதி தவிர, மற்றவர்கள் வாளா இருக்க மாட்டார்கள். தன்னலம் பேணுவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர்தான், எமக்கென்ன? எவர் எப்படிப் பேசினால் என்ன? எழுதினால் என்ன? எமது பிழைப்பில் மண்போடாமல் இருந்தால், அது போதுமென்றிருப்பவர் எந்தக் காலத்திலும் உண்மையான தமிழ்த் தொண்டர்கள் பட்டியலில் வைத்தெண்ணப்படமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களை எதிர்காலம் எள்ளி நகையாடுமே தவிர, அவர்தம் செயல்களை எண்ணி இறும்பூதெய்தாது.

உண்மையாகவே தமிழ்த் தொண்டு செய்பவர்களை எள்ளி நகையாடிவிட்டுத், தாம்தான் தமிழுக்குத் தொண்டு செய்வதாகக் காட்டிக்கொள்ளும் விளம்பர விரும்பிகளின் பட்டியலை எதிர்காலம் எடுத்துக் காட்ட ஒருபோதும் தயங்காது.

எந்தக் காலத்திலும் உண்மைத் தொண்டன் அவன் காலத்தவரால் பாராட்டப்பட்டதில்லை — பாராட்டப்படுவதில்லை. உண்மையை உணர்ந்தறிய, மக்கள், குறைந்தது அரை நூற்றாண்டையாவது கழித்தாக வேண்டும். இது வரலாறு காட்டும் உண்மை.

யார் ஒருவர் தன்னுடைய காலத்திலேயே தான் செய்த தொண்டுக்காகப் பிறரால் பாராட்டப்படுகிறாரோ, அப்படிப்பட்ட ஒருவரை அத்தி பூத்தாற்போல்தான் காணமுடியும். அதேபோது, போலித் தொண்டர்கள் பாராட்டுப் படுவதைப் பொழுதுவிடிந்து மறைவதற்குள் நூற்றுக் கணக்கில் காண முடிகிறது. இந்த முறை இன்று மட்டும் நடப்பதல்ல; மக்கள் தங்களை மக்கள் என்று அறிந்த காலந்தொட்டு நடைபெற்றுவரும் ஒரு மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த இரங்கத்தக்க நிலை மாற வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டு வரும் ஒரு சிலரும் அவ்வப்போது தோன்றிய வண்ணந்தான் இருக்கிறார்கள். பாடுபடுபவன் ஒருவன்— பயன் பெறுபவன் இன்னொருவன் —என்ற நிலை மாறவேண்டுமென்பதற்காகப் பாடுபடுபவர்களை நாடு எளிதில் அறிந்து அப்படிப்பட்டவர்களைப் பாராட்ட முடிவதில்லை. காரணம், பகல்வேடக்காரரின் தொகை அதிகமாக இருப்பதுதான். இப்படிப்பட்ட பகல்வேடக்காரர்களின் தொகை என்றே விரைவில் குறைந்துகொண்டு வருகிறதோ, அன்றேதான் உண்மைத் தொண்டுக்கு மதிப்பும் பாராட்டுதலும் தரப்பட்டு வரவேற்கப்படும்நிலை நிச்சயமாக உண்டாகும். ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரையில், இந்த நிலை விரைவில் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. காரணம், இங்குள்ள பெரியவர்கள் என்று கருதப்படுபவர்கள் பெரும்பாலும் உண்மையை மறைப்பதிலேயே தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிடுவதுதான். இதனால், உண்மைத் தொண்டர்களின் உழைப்புக் கேலிக் கூத்தாக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், தமிழ் மொழிக்கு முதலிடம் அளியாமல், வேறு மொழிக்கு முதலிடம் தருவது தமிழ் மொழியை இழிவுபடுத்துவதாகும் என்று கருதி, தமிழ்நாட்டிலுள்ள புகைவண்டி நிலையங்களில் எழுதப்பட்டிருக்கும் இந்தி எழுத்துக்களை, நாம் — திராவிடர்கள் அழித்தோமல்லவா? இதனைப் பார்த்துக் கேலி பேசியோர் பலர். இந்தி எழுத்துக்களை அழித்துவிட்டால் திராவிடநாடு கிடைத்துவிடுமா என்று கிண்டல் பேசியவர்கள் ஏராளம். அவர்கள் நாம் செய்யும் எந்தக் காரியத்தையும் குறைத்தும் இழித்தும் பேசியாகவேண்டுமென்ற கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டவர்கள் — எதிர்க் கட்சிகளில் இருப்பவர்கள். இவர்கள் நாம் செய்யும் எந்த நல்ல காரியத்தையும் குறைவாகவோ இழிவாகவோ கிண்டலாகவோ பேசினால்தான் தங்கள் கட்சியை வளர்க்க முடியுமென்ற பரந்த அறிவைப் பெற்றவர்கள்—நம்மை வைது தாம் வாழ வேண்டுமென்று நினைப்பவர்கள். இவர்கள் இப்படிச்செய்வதை நாம் குற்றமாகக் கொள்வதில்லை. இப்படிச் செய்வதுதான் தங்கள் கடமையென்று இவர்கள் கருதிக் கொண்டு இருப்பதுமட்டுமல்ல இவர்களின் தலைமைப்பீடமே இப்படிச்செய்ய வேண்டுமென்பதைத் தான் இவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

ஆனால், இன்னொரு பகுதியினர் இருக்கின்றனர். இவர்கள், தங்களை எக்கட்சியிலும் சேராத பொதுவினர் என்று கூறிக் கொள்வதில்பெருமைப்படுபவர்கள். "நமக்கேனய்யா. கட்சியும் பூசலும்? இன்றைக்கொரு கட்சி, நாளைக்கொரு கட்சி என்று மாறும் இயல்பினரல்லோம் யாம்" என்று இறுமாந்து கூறிக் காலங்கழிக்கும் இவர்களால் ஒவ்வோர் சமயம் ஏற்படும் ஆபத்திருக்கிறதே! அது, வேறுயாராலும் செய்ய முடியாதது. நம்முடைய எதிரிகளால் கூடச் செய்யமுடியாத பேரிடையூறுகளை இவர்கள் மிகமிக எளிதாகச் செய்துவிடுவார்கள் அதே போது, மற்றவர்கள் இவர்களை நல்லவர்கள்—யாருக்கும் தீங்கு செய்யாதவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமென்பதில் பெருவிருப்பங் கொண்டவர்கள்.

ஒரு புலவர்—கட்சிகள் எதிலும் சேராதவர் — தமிழ்த்தொண்டு தானுண்டு என்றிருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்; ஒருநாள் ஏதோ ஒரு ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறார்; பொழுது விடிகிறது; இயற்கைக்காட்சிகளைப் பார்க்கிறார்; ஒரு பாறையில் ஒரு மயில் ஆடிக் கொண்டிருக்கிறது; ஆகா! இந்த இடத்துக்கு மயிலாடுதுறை என்று பெயர் வைத்தால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று அவ்வழியே, போகிறவர்களிடம் கூறுகிறார்; அவர்களும் ஆமாம் அழகாகத்தான் இருக்கும் என்று கூறுகின்றனர்; இன்னும் சிறிது தொலைவு போகிறார்; ஓரிடத்தில் ஒரு குரங்கு கூத்தாடிக் கொண்டிருக்கிறது; இந்த இடத்துக்குக் குரங்காடுதுறை என்று பெயர் வைக்கலாம் என்று கூறுகிறார். இயற்கையோடு இயைந்து வாழ்பவனல்லவா தமிழன்; இயற்கையின் எழிலைக்கண்டு இன்புற்ற வண்ணம், தான் கண்ட காட்சிகளுக்கு அப்படியே இயற்கைப் பெயர்களைச் சூட்டி அழைக்கிறான்; பிறகு அப்பெயர்களே அந்த இடங்களின் பெயர்களாக அமைந்துவிடுகின்றன. ஆனால், இன்று அந்தப் பெயர்களால்

அந்த ஊர்கள் அழைக்கப்படுகின்றனவா?

தின்னவேலி
ராம்நாட்
மஜூரா
ராஞ்ஜூர்
நாகபட்டாம்
திருச்சினாப்பொலி
வேதாரண்யம்
விர்த்தாஸலம்
வைத்தீஸ்வரன் கோயில்
திருவாடி

என்று இப்படித்தானே தமிழ் நாட்டிலுள்ள ஊர்கள் பெரும்பாலும் அழைக்கப்படுகின்றன.

திருநெல்வேலி
இராமநாதபுரம்
மதுரை
தஞ்சாவூர்
நாகபட்டினம்
திருச்சிராப்பள்ளி
மறைக்காடு
திருமுதுகுன்றம்
புள்ளிருக்கும்வேளூர்
அல்லது
வினைதீர்த்தான் கோயில்
திருவையாறு

என்ற அழகான இந்த தமிழ்ப் பெயர்கள் மேற்கத்தியான் வாயிலும் வடக்கத்தியான் வாயிலும் சரியாக நுழையாததால் என்ன பாடுபட்டிருக்கின்றன என்றெண்ணி ஏங்காத புலவர்களில்லை.

முன்னாள் படிப்பமைச்சர் தோழர் அவினாசிலிங்கனார் இப்படிப்பட்ட சில ஆங்கில வடமொழிப் பெயர்களைத் தமிழில் ஆக்கினார். எஞ்சியுள்ள சொற்களையும் தமிழில் பெயர்ப்பதற்குள் அவர் வீட்டுக்குப் போய்விட்டார். வீட்டுக்குள் இருந்துகொண்டு இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எளிதாகச் செய்துவிட முடியாது.

வயிறு கழுவவந்த வடநாட்டான் பெயரால் ஒரு ஊர் அழைக்கப்படுவதா? கல்லக்குடி செல்லுபடியாகாதா? டால்மியாபுரம் என்றழைத்தால் தான் தமிழ் வளருமா என்று கேட்டு நாம் போராட்டம் நடத்துகிறோம். நம்முடைய போராட்டம் நியாயமானதென்பதை அறிந்த அரசாங்கம் டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்ற இசைந்து, அதுபற்றிய அறிக்கையும் செய்தித்தாள்களில் வந்தன. ஆனால், பின்னர் அச்செய்தி மறுக்கப்பட்டது. விபீடணர்கள் விரைவு விரைவாக வேலை செய்யத் தொடங்கினர்—கல்லக்குடி பழையபடியும் டால்மியாபுரமாகவே காட்சியளிப்பேன் என்று கூறிக்கொள்வதுபோல் அரசாங்க அதிகாரிகள் கூறலாயினர். ஆனால், டால்மியாபுரம் கல்லக்குடியாகும் வரையில் தமிழன் அயரான் என்பதை முதலில் விபீடணர்களும், அவர்களைப் பக்கத்துணையாக வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்துபவர்களும் உணரவேண்டுகிறேன்.

*

"நான் புகைவண்டியில் போகும்போதும் வரும்போதும் புகைவண்டி நிலையத்தில் உள்ள பலகையில்—மாயவரம் என்ற எழுத்துக்கள் காணப்படும். நான் அப்போது, 'வேறு எதை எல்லாமோ அழிக்கிறார்களே. இதை அழிக்கக்கூடாதா' என்று எண்ணுவேன்"

இந்தப் 'பொன்மொழிகள்' யாருடைய வாயினின்றும் உதிர்ந்தன என்பதை அறிய ஆவல் பிறக்கும் பலருக்கு. அவசரப்படேல்! இதோ அவரைப்பற்றிய இன்னொரு நிகழ்ச்சியையும் கூறிவிட்டு அவரை அறிமுகம் செய்துவைக்கிறேன்.

1938-ல் இந்தி எதிர்ப்பு நடந்ததல்லவா: அந்தப் போராட்டத்தை நடத்தி வெற்றிபெறவேண்டுமென்பதற்காக ஆதரவு திரட்ட முயன்ற நான், பல தமிழ்ப் பேரறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற நேர்ந்தது. கரூரிலிருந்து புறப்பட்ட நான், திருவையாறு தமிழ்க் கல்லூரி வழியாகப்போய்க் கரந்தட்டாங்குடித் தமிழ்ப் பேரவையைக் கண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து, சென்னைப் பல்கலைக் கழகம் வரைசென்று, ஆங்காங்குமுள்ள தமிழ்ப் பேரறிஞர்களையும் கண்டு, தமிழுக்கு நேர்ந்த ஊறுகளைய வாரீர் என்று அழைத்தேன். மறைந்த மாவீரர்களாம் தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரனாரும், வேங்கடசாமி நாட்டாரும் பிறரும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தினர். அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியாக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கலந்து அரசியலாரின் இந்தத் தகாத செயலைக் கண்டித்துப் பேசியதுமன்றி 'இந்தி கட்டாய பாடமா?' என்ற ஒரு ஆங்கில நூலையும் வெளியிட்டு இந்தி நுழைவால் தமிழ் கெடும் என்பதை எடுத்து விளக்கிப் பேருதவி செய்தார்.

பிறகு சென்னைக்குச் சென்று பாரதியாரை ஒத்த பதவியில் இருக்கும் ஒரு தமிழ்ப் பேரறிஞரைக் கண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த தங்களைப்போன்ற தமிழ்ப் புலவர்களும் புரவலர்களும் முன்வந்து ஆதரவு தரவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டேன். அதற்கு அவர் கூறிய விடை என்ன தெரியுமா?

"என் போன்றவர்கள் வெளிப்படையாக வந்து இப்படிப்பட்ட போராட்டங்களில் கலந்து கொள்ளமுடியாமல் இருக்கிறது. இந்தி நுழைவால் தமிழ் கெட்டுவிடும் என்பதை உண்மையாகவே உணர்பவர்களில் நானும் ஒருவன். என்றபோதிலும், அரசாங்கத்தை எதிர்த்துப் போராட என்னுடைய பதவி குறுக்கே நிற்கிறதே"

என்று கூறித் தம்முடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

### யார் இவர்?

"தேவார திருவாசகங்களை ஆண்டவன் வாக்கென்று ஒப்புக் கொள்பவர்கள், தமிழில்தான் ஆண்டவனை வழுத்தவேண்டும் ஏன் தெரியாத மொழியில் வழுத்தல் வேண்டுமென்று கேட்டல் வேண்டும். தமிழிலே வழுத்துதற்குப் பாடல் இல்லையா? போற்றி போற்றி என்னும் போற்றித் திருஅகவலைச் சொன்னால் போதுமே, நேரம் முழுவதும் கூறிக்கொண்டே இருக்கலாம். எனவே, அப்பழங்காலம் தமிழ் நாட்டிற்கு வருதல்வேண்டும். இளைஞர்கள் அதற்குத் துணை புரிதல் வேண்டும். கோயிலுக்குச் செல்லும் இளைஞர்கள், 'தமிழில் பாடினால்தான் காசு உனக்கு' என்று அய்யரிடம் கூறினால், மறுநாளே அர்ச்சனை தமிழிலேயே நடைபெறும். அந்த நாள் மிக விரைவிலேயே வந்தாலும் வரலாம்"

என்று எக்காளமிட்டவர் யாரோ, அவரேதான் இந்தி எதிர்ப்பில் ஈடுபட முடியாத நிலையை வருத்தத்துடன் தெரிவித்த அவரேதான், அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும் வாய்ப்புக் கிடைத்தபோது சிங்கஏறென முழங்கியுள்ளார்.

(13-ம் பக்கம் பார்க்க)




ரிஷ்லு குடும்பத்துக்கு, மூன்ரும் ஹென்ரி எனும் பிரெஞ்சு மன்னன், லூகான் நகர தேவாலயத்தை இனும் தந்திருந்தான். பிரெஞ்சு நாட்டிலே, மன்னர்கள் இப்படி, 'குரு பீடங்களை', 'தேவாலயங்களை', 'பூஜா மடங்களை' தமது இஷ்டம்போல் இனும் தருவது வாடிக்கை.

இன்று முதல், ராமேஸ்வரம் தேவஸ்தான அதிபராக ராமாச்சாரியார் நியமிக்கப்பட்டிருக்கிருர், அவரும் அவரது பின் சந்ததியாரும் ராமேஸ்வரம் தேவஸ்தான அதிபராக இருந்து, அதனுல் கிடைக்கும் வருமானத்தை அடைந்து கொள்வர்—என்று ஒரு சர்க்கார் உத்தரவு இப்போது கிடையாது, இயலாது, ஜனநாயகம் அனுமதி அளிக்காது. புரட்சிக்கு முன்பு பிரான்சிலே இது சர்வசாதாரணமான முறை. மன்னர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, நிலபுலங்களை, மாட மாளிகைகளை, பதவி பவிசுகளைத் தானமாகத் தருவதுபோலவே, குருபீடங்களையும் தேவாலயங்களையும் தருவர்! அதுமுதல் அந்த ஆலய வருமானத்தை அந்தக் குடும்பத்தார் அனுபவித்துக்கொள்வர்; அவர்களாகப் பார்த்து ஆலய காரியங்களைக் கவனிக்க சம்பளத்துக்குப் பூஜாரியை நியமிப்பர். இந்த அலங்கோலமான முறை அமுலில் இருந்த காலம் அது. லூகான் நகர தேவாலயத்துக்கு, அந்த நகரமக்கள் செலுத்தும் காணிக்கை, அந்த நகர மக்கள் மதச் சடங்குகளுக்காகச் செலுத்தும் 'தட்சணை' யாவும், ரிஷ்லு குடும்பத்தாருக்குச் சொந்தம். மதச் சடங்குகளை நடத்திவைக்கவும், ஆலயத்தில் தொழுகை பஜனை இவைகளை நடாத்தவும், ஒரு 'அர்ச்சகர்' வேலைக்கு அமர்த்தப்பட்டார். அவருக்குத் தந்த சம்பளம் போக, மீதமிருக்கும் தொகையைக் குடும்பம் எடுத்துக்கொண்டது.

லூகான் நகர தேவாலயம், அதிக வருமானம் தருவதல்ல—ஏழைகள் நிரம்பிய சிற்றூர். எனவே, சம்பளத்துக்கு அர்ச்சகரை வைப்பதைவிட, ரிஷ்லுவே, அந்த 'வேலை'யைப் பார்த்துக்கொண்டால் இலாபகரமாக இருக்கும் என்ற எண்ணம் பிறந்தது. சாமான்யக் குடும்பம் தானே.

ரிஷ்லு அப்போதுதான் ராணுவக் கல்லூரியில் திறம்படப் பயிற்சி பெற்றுவந்தான். அவன் நிலையிலிருந்த எந்த வாலிபனும், ராணுவ உடை தரித்துக்கொண்டு, குதிரைமீது சவாரி செய்துகொண்டு, உல்லாசமாக வாழலாம்; போர் மூண்டால், களத்திலே திறம் காட்டி, வீரத்தை விளக்கி, விருது பெறலாம், தளபதியாகலாம் என்றுதானே எண்ணுவான். காவி அணிந்து கமண்டலம் ஏந்தி, பாவிகளை ரட்சிக்கும்படி பரமனிடம் 'பூஜை' செய்யும் பண்டார வேலைக்குப் போக மனம் ஒப்புவானா? ரிஷ்லு சம்மதித்தான்! வாள் ஏந்திய கரத்தை, ஜெபமாலை ஏந்தும் கரமாக்கிக்கொள்ள இசைந்தான். வலப்புறம், இடப்புறம், எதிர்ப்புறம் என்று குதிரையைச் செலுத்தி, போர்முறை பயின்று வந்தவன், அந்திவேளைப் பூஜை, அதிகாலைப் பூஜை அருள் கூறல், பிரசாதம் வழங்கல்; ஆறுதலளித்தல், குற்றம் கடிதல் என்பவை போன்ற காரியங்களில் ஈடுபட இசைந்தான். காரணம் என்ன? எந்தக் காரியம் செய்தாலும், திறமையை விளக்கச் சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா, அதுதான்தேவை,ரிஷ்லுவுக்கு. அவ்வளவுதன்னம்பிக்கை! தளபதியாவதற்கான துறையை விட்டுவிட்டு, 'சாமியார்' வேலையை மேற்கொண்ட ரிஷ்லு, லூகான் தேவாலய நிர்காகக் காரியத்தை ஒழுங்குபடுத்துவதிலே மும்முரமாக ஈடுபட்டான். அருள்பெறும் திருமுறையை மக்களுக்கு அறிந்துரைக்கும் பணியான 'பூஜாரி' வேலையை மேற்கொண்ட போது, ரிஷ்லுவுக்கு வயது, பதினேழு!

லூகான் நகருக்கு வந்து வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன்பு, ரிஷ்லு, தன் புதிய தொழிலுக்குத் தேவையான திறமையைப் பெற, பாரிஸ் சென்று மார்க்க சம்பந்தமான படிப்புக்காக இரண்டாண்டுகள் செலவிட்டான். எவ்வளவோ பேர், பூஜாரிகளாக உள்ளனர், கிடைக்கும் வருமானத்தோடு திருப்தி அடைந்து, கிராமத்துக் கொல்லனும் உழவனும், ஜெபமாலை உருட்டும் கிழவியும், பாவ மன்னிப்புக் கோரும் முதியவனும் தரும பாராட்டுதலைக் கேட்டுக் களித்து, இதுபோதும் நமக்கு என்று. ரிஷ்லு, அப்படியல்ல! லூகான் தேவாலய அதிபர் யாராலும் பாராட்டப்படவேண்டியவராகவேண்டும். மற்றத் தேவாலய அதிபர்களெல்லாம், இரண்டோர் ஏடுகளை மனப்பாடம் செய்துகொண்டவர்கள், ஆழ்ந்த ஆராய்ச்சி, அறிவுத்தெளிவுள்ள விளக்க உரை தரும் ஆற்றல் இல்லாதவர்கள். லூகான் நகர தேவாலய அதிபராக, அரும்பு மீசை வாலிபன் ஒருவன் அமர்ந்திருக்கிருன், அவனுடைய அறிவே அறிவு, அவன் அளிக்கும் உபதேசமே உபதேசம் என்று அனை வரும் புகழ்ந்து பேசவேண்டும்; மக்களின் கவனத்தைக் கவரவேண்டும்; அந்தப் புகழொளி, பாரிஸ் நகரில் தெரிய வேண்டும்; அழைப்பு அங்கிருந்து கிடைக்கவேண்டும்—இது ரிஷ்லுவின் எண்ணம். கிடைக்கும் வாய்ப்பை, பெரியதோர் நிலைபெற உபயோகிக்கவேண்டும் என்ற நோக்கம். எனவேதான், பரம்பரை பாத்யதையாகக் கிடைத்த பூஜாரி வேலை என்ருலும், மதவாதிகள் உலகு மதிக்கும் விதமான அறிவாற்றல் பெற்று, அந்த வேலையில் ஈடுபடவேண்டும் என்று ரிஷ்லு திட்டமிட்டான். இரண்டாண்டுகள் கடுமையாக உழைத்து, மத ஏடுகளில் பெரும்புலமை பெற்ருன்.

உண்மையிலேயே மார்க்கத் துறையிலே நம்பிக்கையும் அக்கரையும் பிறந்து, எந்தச் சந்தேகத்தையும் பஞ்சு பஞ்சாக்கவல்ல ஆதாரங்களை ஆய்ந்தறிந்துகொள்ளவேண்டும், மெய்ஞ்ஞானத்தின் தன்மையை உணரவேண்டும், சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வத்தை, தேஜோமயானந்தத்தை அறிந்து மகிழவேண்டும், பவப்பிணி அகலும், பற்றும் பாசமும் மாய்ந்தொழியும், அருள் கிட்டும், பரலோகத்தில் சிரியதோர் நிலை கிடைக்கும் என்பதற்காக, இரவு பகலாக, ஆண்டுக்கணக்கில், மத

ஏடுகளைக் கற்றும், விதவிதமான 'ஞானசிரியர்களை' அடுத்தும், பக்குவம் பெறுவர்—சிலர்—பலர் முயல்வர். ரிஷ்லுவின் நோக்கம் அவ்விதமானதல்ல. உலகத்தின் மாய்கையை, வாழ்க்கையின் நிலையாமையை, உணர அல்ல, ஏடுகளைப் படித்தது; அவைபற்றி, கேட்போர் மெச்சும்விதமாக எடுத்துரைக்க! அதன்மூலம் தன் புகழ் பரப்ப! புகழொளியைத் துணைகொண்டு, உயரியதோர் பதவி பெற, பாரிசில் அரசோச்சும் குழுவிலே அமர, அரசாள!

லூகான் நகர தேவாலய அதிபராகி, அதிலேயே மூழ்கிவிட விரும்பவில்லை. இது ஒரு கட்டம் — முக்கியமானது—கூர்த்த மதியுடன் இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், வேறு பல கட்டங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பது ரிஷ்லுவின் திட்டம். யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள், அனேகருக்குத் தோன்றவே செய்யாது. ஆனால் ரிஷ்லு எல்லோரையும்போல அல்ல. அவன் மனதிலே உறங்கிக்கொண்டல்ல, உலவியபடி இருந்த ஆசைகள் அநேகம். எல்லா ஆசைகளும் ஆதிக்கம் பெறவேண்டும், ஈடில்லை எதிர்ப்பில்லை என்ற நிலை பெறவேண்டும் என்பதுதான். வாளின் கூர்மையைப் பாராட்டும் வீரன், களத்திலே வெற்றியும் கீர்த்தியும் பெறுவதற்கு வாளைத்துணையாகக்கொள்வான்—மற்றவாள்களுடைய கூர்மையைவிட என் வாளின் கூர்மை நேர்த்தியானது என்று பேசிக்கொண்டா காலங் கடத்துவான்!

பாரிசில், மத ஏடுகளைக் கற்று, ரிஷ்லு, பல பரிட்சைகளில் தேறினான். திருப்தியில்லை. ரோமாபுரி சென்று, போப்பாண்டவரைக் கண்டுவர ஆவல்கொண்டான்.

கத்தோலிக்க உலகுக்கு போப்பாண்டவர் கண்கண்ட கடவுள்! அரசுகள், போப்பாண்டவரின் ஆசிபெறத் தவங் கிடந்தன. பிராடெஸ்டென்ட் புயல் வீசி, ஆதிக்கம் ஒரு அளவுக்கு அழிந்துபட்டது என்றபோதிலும், ரிஷ்லுவின் நாட்களிலே போப்பாண்டவருக்கு, பிரான்சிலேயும், கத்தோலிக்க மார்க்கத்தைக் கொண்டிருந்த வேறுபல ஐரோப்பிய நாடுகளிலேயும், அளவற்ற செல்வாக்கு. பக்திமிக்க கத்தோலிக்கர், போப்பின் தரிசனம், பாப விமோசனம் என்று எண்ணுவர்—பரமண்டலத்திலே பிதா முன்னிலையிலே செல்வதுபோன்ற புனிதத்தன்மை நிரம்பியதாகவே போப்பாண்டவரைத் தரிசிப்பதைக் கருதுவர்.

ரிஷ்லு, போப்பாண்டவரைக் காண விரும்பியது, இந்த நோக்குடன் அல்ல! இதோ ஒரு புதிய நட்சத்திரம், இதன் ஒளியின் அழகுதனைக்காணீர்! என்று போப்புக்கு எடுத்துக் காட்டவே, ரிஷ்லு ரோம் சென்றான். அங்கு புகழ் பெற வேண்டும் என்பது நோக்கம். அதற்கோர் வாய்ப்பும் கிடைத்தது. தேவாலய அதிபர் பதவிக்கு ஏற்ற வயது இல்லை, ரிஷ்லுவுக்கு. எனவே, போப்பாண்டவரிடம் மனுச் செய்துகொண்டு, அவர் ஆசியும் அனுமதியும் பெற்று, வயதிற் சிறியவனுயினும் வல்லமை மிக்கோன், எனவே இவன் ஆலய அதிபனுகலாம் என்று அவர் கூற வேண்டும்—இதனைச் சாதிக்க, சிபாரிசு தேவை இல்லை; நானே செல்வேன், மார்க்க சம்பந்தமான துறையிலே எனக்குள்ள புலமையையும் திறமையையும் அவரே காணட்டும், அனுமதி எளிதில் அளிப்பார், என்று கூறிவிட்டு ரிஷ்லு ரோம் சென்றான்—அனுமதியும் பெற்றான்.

ஐந்தாம்பால் என்பவர் அப்போது போப்பாண்டவர். அவர் அவையிலே, மார்க்கத்துறைத் தலைவர்களும் அரசியல் துறைத் தலைவர்களும் நிரம்பி இருந்தனர். ரிஷ்லு, அந்த அவையினர் மகிழத்தக்க மதி நுட்பத்தைக் காட்டி வெற்றிபெற்றார். ஒரேமுறை, ஒரு உபதேசியார் அருளிய உபதேசத்தைக் கேட்ட ரிஷ்லு, உடனே அப்படியே அதை தவறு துளியுமின்றி ஒப்புவித்தாராம்—அதிசயமடைந்த போப்பாண்டவர் ரிஷ்லுவை அழைத்து, ஒப்புவிக்கச் சொல்லிக் கேட்டு இன்புற்றாராம். அதேபோது ரிஷ்லு, உபதேசம் எப்பொருள்பற்றியதோ அதே பொருள் குறித்துத் தானே புதியதோர் உபதேசம் தயாரித்து, சொற்பொழிவாற்றினாராம்; போப், மிகவும் பாராட்டினாராம்.

"ஆசாமி பெரிய எத்தனுவான்"—என்ற பொருள்பட போப் ரிஷ்லுவைப்பற்றிக் கூறினாராம்.

போப்பாண்டவரிடம், ரிஷ்லு, தன் உண்மை வயதை மறைத்துத் தவறான சீட்டுக் காட்டி ஏய்த்தார் என்றும் வதந்தி உண்டு. ரிஷ்லுவுக்கு இது தெரியாத வித்தையல்ல!

ரோம் நகரிலே புகழ் ஈட்டிக்கொண்டு, பதவிக்கான அனுமதியும் பெற்றுக்கொண்டு, ரிஷ்லு, பாரிஸ் திரும்பினார்.

ரோம், மார்க்கத்துறைக்குத் தலைநகரம்!

பாரிஸ், அரசியல் உலகுக்குத் தலைநகரம்!

முன்னதில் ஜெபமாலை ஏந்திய கரத்தினர், வாளேந்திய மன்னரைச் சீடர்களாகக்கொள்ளும் முறைபற்றிய விளக்கம் கிடைத்தது, ரிஷ்லுவுக்கு.

பாரிசில், அரசோச்சும் அதிபர்கள், ஜெபமாலையையும் தமது சுயநலத்துக்காக எப்படிப் பயன்படுத்துகின்றனர், என்ற தெளிவு கிடைத்தது.

பாரிசில், அரசியல் சம்பவங்கள் மின்னல் வேகத்தில்! ரிஷ்லு, அவைகளை எல்லாம் கூர்ந்து கவனித்தார்.

லூகான் நகர தேவாலய அதிபர்-போப்பாண்டவரின் ஆசியும் பெற்றவர்—இவருக்கு எதற்காகப் பாரிஸ் பட்டணத்துப் பகட்டுடைக்காரர்களின் அரசியல் நடவடிக்கைகளைப்பற்றிய அக்கரை என்று எண்ணுவீர்கள் — உடை மட்டும்தானே காவி! உள்ளமோ அரசியலில் ஆதிக்கம் பெறவேண்டும் என்பதல்லவா!

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு"—இது ஏமாளிக் கொக்கு அல்ல, உறுமீன் வருமளவும் ஓடுமீன் உண்டு, காத்துக்கொண்டிருந்தது!

லூகான் நகர தேவாலயம் ஆண்டுக்கு 13000 லிவர்ஸ் (பிரன்ச்சு பவுண்டு) வருமானமே உடையது. இந்த அற்பத் தொகைக்காக அல்ல, ரிஷ்லு ஆசைப்பட்டது! அவன் மனதிலே உலவிய எண்ணத்தின்முன்பு, இந்தத் தொகை வெறும் தூசு. பலருடைய கவனத்தைக் கவருவதற்கு இந்த இடம் ஒரு வாய்ப்பாக இருக்கட்டுமே என்பதற்காகவே, லூகான் தேவாலய வேலையை ஏற்றுக்கொண்டான்.

பழைய கட்டடம்—படாடோபம் கிடையாது—அதிகமான பணப் புழக்கம் இல்லை—தங்க வெள்ளி தட்டுகள் இல்லை—பட்டு விரிப்புகள் கிடையாது — சாமான்யமான நிலை, லூகான் நகர தேவாலயம். இதிலே உலவியபோது ரிஷ்லுவின் உள்ளம், அடைபட்டுக் கிடந்த சிங்கம்போன்றிருந்தது. கூண்டுக்குள் உலவிடும்போதும், சிங்கத்தின் நடையிலே ஒரு கெம்பீரம் இருப்பதுபோல, இந்தச் சாமான்யமான தேவாலய அதிபர் எனும் சிறையிலும், ரிஷ்லு, தன் திறம் பிறர்க்கு விளங்கும்வகையிலே நடந்துகொண்டான்,

"என் வீடு சிறைபோன்றது! பூந்தோட்டம் இல்லை—உலவும் இடம் கிடையாது—எங்கும் புகைமயம்-வெள்ளித்தட்டுகள் இருந்தாலாவது பரவாயில்லை, கிடையாது"... என்று ரிஷ்லு, குறைப்பட்டு, நண்பருக்குக் கடிதம் எழுதினான்.

அதே ரிஷ்லு, கார்டினல் ரிஷ்லுவாகி, பிரான்சை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் பெற்ற பிறகு, புதிதாகக் கட்டிய 'கார்டினல் மாளிகை'க்கு, நிலத்தைப் பண்படுத்த

வும், மாடிகள் அமைக்கவும்மட்டும் 336,000 லிவர்ஸ் செலவிட்டான்! கட்டிடச் செலவு 410,000! அலங்கார அமைப்புகள், நீர் ஊற்றுகள், பூச்செடிக்கான தொட்டிகள் இவற்றுக்காகமட்டும், 60,000!

உலவ இடமில்லை என்று வாட்டம் — பிறகு, உலவ நேரமில்லை என்ற வருத்தம். மன்னன் கண்டு அதிசயிக்கத்தக்கதும், பிரபுக்கள் கண்டு பொருமைப்படத்தக்கது மான மாளிகை இரண்டு அமைத்திட முடிந்தது, புகை கப்பிக்கொண்டு, ஓதம் நிறைந்து, சோகமூட்டும் நிலையிலிருந்த தேவாலய அதிபராக வாழ்க்கையைத் துவக்கிய இந்தக் காரியவாதியால்!

(தொடரும்)

# போலீஸ் பொன்னுச்சாமி திகைக்கிறார்!

அதோ! உயர்ந்த உருவம், நீண்ட மீசையும் கொண்டு, மிடுக்கான தோற்றத்துடன் வரும் போலீஸ் பொன்னுசாமியை, அறியாதார், இரார்.

போக்கிரி! சாக்கிரி! கொலைகாரன்' கொள்ளையடித்தவன்! எல்லாம் அவருக்குத், துரும்புபோல. விட மாட்டார்! திறமையைப் பாராட்டி 'மெடல்'கள்கூட அளிக்கப்பட்டிருப்பவர்!!

அவருக்கு சட்டம் என்றால் சட்டம்தான்!— அவ்வளவு கடமையுள்ளம் கொண்ட நல்லவர். யாருக்கும் பணியமாட்டார். இலஞ்சம், ஊழல், இதெல்லாம் அவருக்கு வேம்பு. அப்படி வாங்குவதால், அரசாங்கம் தண்டிக்கும் என்கிற பயத்தைவிட, நாளையதினம் இறந்த பிறகு நடக்குமே 'எமதர்மனின் விசாரணை' அதற்காக மிகவும் அஞ்சுபவர்! நெற்றியில் பளபளவென்று மின்னும் நாமமே சொல்லும், அவர் எவ்வளவு பக்திமான் என்பதை!! "யாராயிருந்தா, நமக்கென்ன சார்? டூட்டின்னா டூட்டிதான்! பணக்காரனாயிருந்தா அவன் வீட்டிலே, பலேகில்லாடின்னு, இரண்டு குத்திலே அலறணும்," என்று துணிச்சலோடு சொல்வார். ஆனால், கோயில் குருக்களைக் காணும்போது, போலீஸ் தொப்பியைக் கழட்டிவிட்டு, அவர் கும்பிடத் தவற மாட்டார்! டி. எஸ். பியை விட, அய்யருக்கு, போலீஸ் பொன்னுசாமியிடமிருந்து அதிக மரியாதை கிடைக்கும்!! அவ்வளவு, சனாதன நம்பிக்கை யுள்ளவர்.

அவருக்கு இப்போது, ஒருசிக்கல்! பக்கத்து கிராமத்துக்கு, ஒரு 'கேசை'ப் பிடிக்கப் போகவேண்டும் —கொலைக்கேஸ் அல்ல! கலியாணக் கேஸ்!! ஆமாம், முதல் தாரம் இருக்கும்போது, இரண்டாம்தாரம் செய்துகொள்ள ஒருவர் முனைவதாகப் போலீஸ் இலாகாவுக்குத் தகவல் எட்டியிருக்கிறது. சட்டம் என்றால் சட்டம்தானே, அவருக்கு. அதனால் புறப்படப் போகிறார், கிராமத்துக்கு. சப்–இன்ஸ்பெக்டர், சம்பத்து ஒருதினுசான ஆசாமி! அவருக்கு, பொன்னுசாமியைப் பற்றி, அதிகம் தெரியும்!! கொஞ்சம், குறும்பு சுபாவம் உள்ளவர்.

அதனால் பொன்னுசாமி 'ஸ்டேஷனிலிருந்து' விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போகும்போது, கூப்பிட்டார் அவரை.

"பொன்னுச்சாமி!"

"சார்...!"

'உனக்கு என்ன 'டூட்டி' ஞாபகம் இருக்கிறதா?"

"கிராமத்துக்குப் போய் இரண்டாம்தாரக் கலியாணத்தைத் தடுத்து அந்த ஆளை 'அரெஸ்ட்' செய்துகொண்டு வரவேண்டிய டூட்டி சார்...!"

"ஹும்! உம்முடைய பத்து வருஷத்து சர்விசிலே சட்டத்தை மீறிய யாரையும் நீர் பிடிக்காமல் விட்டதுண்டா?"

"கிடையாது சார்! இவருக்குச் சட்டம்னா சட்டம்தாங்க!"

"அதை மீறுகிற யாரையும் விட மாட்டீரே?"

"அண்ணன் தம்பின்னுகூட விடமாட்டேங்க–முதலிலே கையில் விலங்கைப் பூட்டிடுவேன்"...

"ரொம்ப சரி! ஒரு பெண்டாட்டி இருக்கும்போது, இன்னொரு பெண்டாட்டியைக் கட்டிக்கிறது தப்பு தானே?"

"சட்டப்படி, தப்பு சார்—தப்பு"

"சரி, இது என்ன? பாரும்"

பார்த்தார், பொன்னுச்சாமி ஏன் விழிக்கிறார் அப்படி? ஏன் அவர் முகம் ஒருதினுசாகப் போய்க் கொண்டிருக்கிறது? முகத்திலே ஏன் அவ்வளவு வியர்வை? அப்பப்ப, மிகவும் சோகத்துடனல்லவா காணப்படுகிறார்!

விஷயம் இதுதான்! பெரிய தெரு பீமராயர் வீட்டில் நாளைக்கு ருக்மணி கலியாணமாம்! விசேஷ போலீஸ் பந்தோபஸ்து வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார், பீமராயர். ருக்மணி என்பது, பீமராயருடைய பெண்ணல்ல; சாட்சாத் எம்பெருமான் கிருஷ்ணபரமாத்மாவினுடைய மனைவி ருக்மணிதான்! அந்த ருக்மணிக்கு, மீண்டும் கலியாணம்.

நோட்டீசைக் காட்டிக் கேட்கிறார் சப் இன்ஸ்பெக்டர்–'என்ன பொன்னுச்சாமி! பாமா இருக்கப்ப, இந்தக் கிருஷ்ணன் இன்னொரு பெண்ணைக் கட்டிக்கலாமா?"

"கிருஷ்ணன்...சாமிங்க"

"சாமி, தப்புதண்டா செய்யலாமா பொன்னுச்சாமி! சட்டம்னு சட்டம் தானே?

கேட்கிறார், சப்–இன்ஸ்பெக்டர்! விழிக்கிறார், பொன்னுசாமி. பாவம் என்ன பதில் சொல்வார், அவர்! எந்தச்சாமிதான், ஒரு மனைவியோடு வாழ்வதாக இருக்கிறது, நமது புராணத்தில்!! ஊம்...'அரெஸ்டு' செய்வதென்றால், சட்டப்படி, போலீஸ் பொன்னுச்சாமி, எந்தக் கடவுளைத்தான் விட்டுவிடமுடியும்? சிக்கலான விஷயம்தானே! திகைக்கும் பொன்னுசாமியால், என்ன பதில் சொல்ல முடியும்! திகைக்கிறார். ★

## லண்டனில்

பிரிட்டனிலுள்ள தினசரி ஏடுகள் யாவும் கடந்த இருபது நாட்களாக, வெளிவரவில்லையாம். தொழிலாளர் வேலை நிறுத்தமே காரணமாம். இதனால், உலகச்செய்தியான, சர்ச்சிலின் விலகலைப்பற்றி அறிவிக்கும் செய்தியைக் கூட அவைகள் அறிவிக்க முடியாமற்போயிற்றாம். காலையில் எழுந்ததும், தினசரியைத் தேடும் மக்கள், செய்திகளை அறிய பத்திரிகை அலுவலகங்களின் முன்னால் போய் 'க்யு' வரிசையில் நின்று, முக்கிய விஷயங்களை அறிந்து கொண்டு, வீடு திரும்புகின்றனராம்! ★

திராவிடநாடு

காஞ்சி] 24—4—55 [ஞாயிறு

# மகத்தான சக்தி பொறுப்பான கட்டம்!

★

வருகிறது, 24! ஆனந்தத்தோடு அறிவிக்கிறோம், கழகக் காளையருக்கு, குதுகலத்தோடு கூறி அழைக்கிறோம், கழகச் சகோதரர்களை, செயல் முகம் திருப்புவீர், சிங்காரச் சென்னையின் பக்கம் என்று. சிந்தனை அணு ஒவ்வொன்றும் மகிழ்ச்சி அலைமோத, அழைக்கிறோம் திராவிடத்தை.

இவ்வளவு ஆனந்தம், இணையிலாத குதுகலம், எப்போதும் இல்லாத மகிழ்ச்சி அலை மோதுவானேன் — என்று கேட்கலாம், அன்பர்கள்! உண்மையிலேயே' ஏப்ரல் 24.ந்தேதி, திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் ஈடு இணையற்ற தினம்தான். ஏச்சுக்கும் பேச்சுக்கும் இரையாக இருந்த பருவமங்கை, வட்டமிட்ட கழுகுகளுக்குத் தப்பி, திட்டம் போட்ட சீமான்களுக்கு அகப்பாடது அணிந்திருப்பது கந்தையே ஆனாலும்' சீவிமுடிக்கும் 'சீப்பு'க்கும் வழியற்றவளானாலும், சென்டும் சோப்பும் பெறும் மார்க்கமற்ற ஏழையென்றாலும் பண்பின் படி தவறவில்லையென்றெண்ணும் போது — அம் மங்கையின் மனதிலும், அவளை வளர்த்தெடுத்தோர் இதயத்திலும், மலர்வதுண்டல்லவா, மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியைத்தான், உவமை கூறலாம், நமக்கேற்பட்டுருக்கும் ஆனந்தத்துக்கு! அதனால்தான், தோழர்கள், சுந்தரத் திருமுகம் தூக்கி சுடரெனும் கண்களில் ஒளி கூட்டி, இதயம் விடும் ஆனந்த மூச்சுகளோடு 24-வருகிறது! எதிர்பாரீர்! என அழைக்கிறோம்.

அன்று, சென்னையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு கூடப்போகிறது.

இதற்கா, இவ்வளவு ஆனந்தம்?—என நினைக்கலாம், எதனையும் சாதாரணமானதென எண்ணும், போக்கினர். ஆனால், இந்தப் பொதுக் குழுக் கூட்டத்தின் முக்கியத்தை கழகக் காளையரே உணர முடியும.

ஆறாண்டுகளுக்கு முன்!—தலைவரின் தகாப் போக்குக்கண்டு, துடித்து, கண்ணீர் வடித்து, தனி இடம் தேடவேண்டியவர்களானோம். இருந்த இடத்தின் உரிமைகளையெல்லாம், அங்கேயே விட்டுவிட்டு, புதிய கழகங்கள், புதிய பிரசார இயந்திரம், புதிய கழக ஏடு முதலிய எல்லாக் காரியங்களையும் புதிதாகவே தேடும் நிலைமைக்கு ஆளானோம், எனினும், முயற்சி, தனிப்பட்ட ஒருவரின் முயற்சியில்லையென்பதாலும், நாட்டின் நாடித் துடிப்பே திராவிட முன்னேற்றக் கழகம் என்பதாலும், அம் முயற்சியில் வெற்றிகண்டோம்! ஏராளமான புதுக் கழகங்கள் —புதிய முகங்கள் ஆயிரக் கணக்கில் — மாவட்டந்தோறும் மாநாடுகள், ஒவ்வொன்றிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் — பலனைக் கண்டோம்! உழைப்புக்கும், களங்கமற்ற அரசியல் கண்யத்துக்கும் நாடு வழங்கும் நல்லாசி இதுவென உள்ளம் மகிழ்ந்தோம்!! அந்த மகிழ்ச்சியின் சின்னம் போல மாநில மாநாடு நடத்தினோம் —சென்னையில். அந்த மாநாட்டின் முலம், கழகத்துக்கென்று சட்டதிட்டம் ஒன்றும், அமைத்தோம். ''சட்டமா! திட்டமா!! — இதென்ன?'' — என்று கேட்கும் அரசியல் தலைவர்கள் உண்டு. சொல்லே சட்டம்! வார்த்தையே விதிமுறை!!—எனும் வாய்ப்புக்கு, ஆளானவர்கள், அவர்கள். அப்படிப்பட்ட 'தம்பிரான்' முறை, மடங்களுக்குத்தான் லாயக்கே ஒழிய—அரசியல் கட்சிகளுக்குச் சிறிதும் பொருந்தா. அதனாலேயே, நிலையான ஒரு சட்ட திட்டம் வேண்டுமென்று, நினைத்து, தீட்டி முடித்தோம்!

வரப்பு இல்லாத வயலும், அணையில்லாத ஏரியும், எப்போதும் ஆபத்தானவை மட்டுமல்ல; பயனும் தர முடியாதவை. அதனால்தான், இதோ, சில தினக்களுக்கு முன் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் செயலாளர் நண்பர் ராஜ்போஜ் என்பார், அங்கிருந்து வெளியேற வேண்டிய ''விபரீதத்துக்கு'' ஆளாகநேர்ந்ததாக அறிவிக்கிறார். அறிஞர் அம்பேத்கார், அந்த இயக்கத்தின், பிதா. ஆயினும், இயக்சத்தின் நடைமுறைத் தலைவராக இருப்பவர் தோழர் சிவராஜ். ஆனால் அவர் இருக்குமிடமே தெரியாத நிலையில்' அம்பேத்கார் அவர்களே எல்லாக் காரியங்களையும் செய்வதாகவும், சொல்லே சட்டம்! விழிகாட்டுவதே வழி! வாக்கே வேதம்! எனும் முறையில் இயக்கத்தை ஆளாக்கிவருவதாகவும், அதன் காரணமாகத்தான் இரண்டு தலைவர்களுக்கிடையில் அகப்பட்டு விழிக்கும் இக்கட்டுக்கு ஆளானதால், வேறு மார்க்கமின்றி விலகுவதாகவும், வெளியிடுகிறார்—ராஜபோஜ். இந்த விளக்கத்தின் உண்மைகள் என்னவோ!—சரிவா, அறியும் வாய்ப்பில்லை, நமக்கு. ஆனால், ராஜபோஜ். சொல்வது உண்மையெனின், இப்படிப்பட்ட அரசியல், மிகமிக ஆபத்து, என்போம்! ஏனெனில், இது, தலையாட்டுவோரின் காலம் அல்ல—மக்கள் முடிவுக்கு சிரம் குனியும் காலம். மக்களுக்காக—மக்களால்—முடிவுகள், எடுக்கப்படுகின்ற, ஜனநாயக காலம். இப்படிப்பட்ட புதுயுகத்தில், நாட்டாண்மைக்கார அரசியலும், சர்வாதிகாரப் போக்கும், அரசு மன்றத்தில் மட்டுமல்ல, கட்சிகளிலும் நீடிப்பதை எவரும் ஏற்கார்! மந்தைக் குணமும், சந்தைச் சுபாவமும் இருந்த காலத்தில் மக்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருந்ததுண்டு. குருநாதர் கூறியதே, கட்டளை! அவரது பேச்சுக்கு எதிர்ப்பேச்சு உரைப்பது—பாபம்! பாபிகளுக்கு, ரௌரவாதி நரகமே, கிடைக்கும்!—என்றெல்லாம் சொல்லி, மக்களை, நம்பச்செய்ததுண்டு.

இது, புதுமை பூக்கும் பொற்காலம்.

மக்களின் பெயரைச்சொல்லி, அவர்களை மந்தைகளாக்கும் முறைகளுக்கு சம்மட்டியடி கொடுக்கும், ஜனயுகம்.

எனவேதான், சட்டதிட்டம்; அமைப்பு முறை, வோட்டெடுப்பு—எனும், சகல அம்சங்களையும் ஏற்று அமுல் நடத்தவேண்டும் என்கிற இடையறாத ஆசைக்கு ஆளாகி, அதனை வெற்றிகரமாகவும் செய்து முடித்தோம்.

அப்படி நிறைவேற்றிய சட்டதிட்டங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு, சென்னையில் கூடப்போகிறது.

வீழ்ந்த தென்னகத்தை மீட்க விடிவெள்ளி, முளைத்தது. வெள்ளுடை வேந்தன் தியாகரும், பனகாலும், நாயரும், செல்வமும் பலரும், இன்பக் கனவுகள் கண்டனர்! அந்தக் கனவுகள், நனவான காட்சிதான், தி. மு. கழகம்.

சாய்ந்துபோன, மக்களை உயர்த்த, முன்வந்தது—சுயமரியாதை இயக்கம். அதன் கொடி பறக்க, அழகிரியும், மணியும், நடராசனும் பிறரும், தொண்டர் தம் துணைவர்களாக இருந்து, முழக்கினர் துந்துபி. அந்த வீரக் குரலின் கூட்டுக் குரல், திராவிட முன்னேற்றக் கழகம்!

வெண்தாடி வேந்தர், சிந்தனைச் சிற்பி, வைக்கம் வீரர், அன்னை நாகம்மையாரைத் துணைவியாகப் பெற்ற அருமைப் பெரியார், என்று நீதிக் கட்சியும் சுயமரியாதைச் சங்கமும், பெருமை கொண்டது—நமது பெரியார்அவர்களைப்பற்றி. அத்தகையவரின் பயிச்சிக் கூடத்திலே, பயின்றோரின் பாசறைதான், தி. மு. கழகம்!

''நீதிக்கட்சியா? எங்கேயிருக்கிறது, அது! நீளக் குழிதோண்டிப் புதைத்துவிட்டோம்! சர். ஏ, ராமசாமியைச் சாய்த்தோம், பலரை வெள்ளையரின் தாசர்களாக்கிவிட்டோம்'' என்று

ஆனந்த சாகரத்திலாழ்ந்தது, தேசிய இயக்கம்.

"சுயமரியாதைச் சங்கமா! அது, நாஸ்திகர்கள் கும்பல். கல்லாட்டார்ச் சங்கம்! ராமசாமி நாய்க்கரின் கூட்டம். இதுகளை, யார் நத்துவர்" என்று ஏசல் கணைகளைப் பூட்டியது பூசுரர் கோட்டம்.

உண்மைதான்! நீதிக்கட்சியால் தேசீய இயக்கத்தை எதிர்த்து நிற்க முடியவில்லை. சுயமரியாதைச் சங்கம், மக்கள் சங்கம் ஆகமுடியாமல் 'மனுமாந்தாதிகளால்' பழிசூட்டப்பட்டுப் பலியாக்கப்பட்டுவந்தது.

பழிசூட்டும் படலம் முடிந்தது. நீதிக்கட்சியும் சுயமரியாதைக் கொள்கைகளும் கலந்துஎழுந்தது, திராவிடர்கழகம். புது ஒளி உருவாயிற்று! பூத்தது, கண்கள்! புது உயிர், எழுந்தது!—அதே சமயத்தில், ஏடுகளில் படித்த எண்ணங்களை, நாட்டிலும் பதிக்க வேண்டுமெனும் நல்லாசை கொண்ட மாணவர் பட்டாளம் நுழைந்தது. அம்மாபெரும் இளைஞர்களின் குரல், நாடு நகர் பட்டிதொட்டி எங்கும் "வாழ்க பெரியார்! வாழ்க திராவிடர் கழகம்!" என்று சங்கநாதம், செய்தது. மருண்டனர் மாற்றார்! எலியென நினைத்தோம்—பூனைபோல் காட்சி அளித்தது —இன்று புலியாகவும் ஆகி, போர்க்குரல் எழுப்புகிறதே என்று அஞ்சினர்.

அஞ்சியோர் கண்களில் மகிழ்ச்சி ஒளி ஏற்படச்செய்வதுபோல, தாவிப் படரும் கொடியை முறித்தெறிய முற்படுவதுபோல, ஏதேதோ எடுத்து வீசினர், பெரியார் — தொடர்பைத் துண்டிப்பதில், முனைந்தார்—துரோகிகள் என்றார், 'லாயக்கில்லை' என்றார், 'வாரிசு' வேண்டுமென்றார்; வடித்த கண்ணீரை, அவருக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, ஒவ்வொருவரும் இருதயத்தைத் தடவிக்கொண்டோம். ஏனிந்தப்பொதுவாழ்வு?—எனச்சலித்துக்கொண்டோருண்டு. இவ்வளவு பெரிய பரந்த உலகில், மனித உயிர்களுக்குச் சேவை செய்யவா, மார்க்கம் இல்லாமற்போகும்?—என்று கேட்டுக் கொண்டவர்களுண்டு. துடித்தோருண்டு, தொடையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிடலாம் என முயன்றோரு முண்டு—எனினும், இவ்வளவு சிக்கல்களையும் தாண்டி, எழுந்தோம்! வீங்கிய கண்கள், திறந்தன! குனிந்த தலை, நிமிர்ந்தது! சோர்ந்தோர், வீரர்களாயினர்! முன்னேற்றக் கழகம் பிறந்தது—சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திற விழி!" என்றார், புரட்சிக் கவிஞர். அவரது பாடலின் பொருள், புரிந்தது, ஒவ்வொரு வாலிபனுக்கும்—சிங்க இளைஞனானான்! திருப்பினான், முகத்தை! திறந்தான், விழியை! பம்பரமானான்—பட்டிதொட்டியில் கழகம்—நகரங்களில், கழகம்—நாடு முழுமையும், கழகம்.

ஆறாண்டுகளில், தியாகர் கண்ட கனவு, சுயமரியாதைச் சுடர்கள், 'என்றுதான் வருமோ, அந்தக்காலம்?' என்று ஏங்கிய காலம், வந்து விட்டது. சிலரது கட்சி! ஒரு சிறுகும்பலின் கழகம்!!—என்ற கட்டம் மாறி, குருதியும் கண்ணீரும் கொண்டு எழுதப்பட்ட கொள்கைகள் மக்கள் மன்றத்துக்குச் சென்றுவிட்டன. கழகம், ஒரு மக்கள் சக்தியாக ஆகிவிட்டது.

இதனை, மறுப்பாருண்டு; இவர்கள் அரசியல் அரிச்சுவடி அறியாதவர்கள், யாரால் ஏற்பட்ட சக்தி தெரியுமா?—என, பெருமைகொண்டாட வருவோருண்டு; தகராறுக்குரியவர்களல்ல இவர்களும். தீயசக்தி ஐயா அது! எப்படியோ மக்களைமயக்கிவிட்டார்கள்! என்று தீருமோ இந்த மனமயக்கம் என்று சலித்துக்கொள்வோருண்டு; இவர்கள், அரசியலில் நொந்து போனவர்கள். ஆகா! முடியுமா? ஏதோ, கூட்டம் போட்டு அழகாகப் பேசிவிட்டால்போதுமா!உருப்படியாக என்ன செய்யத் தெரியும்?—என்போரும் உண்டு. இவர்கள், கோழையும் வீரனாகும் புதுயுகம் என்பதை அறிந்தும் உணராத அரசியல் செவிடர்கள்.

இவர்கள் தவிர்த்து, ஏனையோரெல்லாம், நிச்சயம் உணர்வார்கள்—திராவிட முன்னேற்ற கழகம் ஒரு மக்களின் சக்தி என்பதை.

இப்படி மக்களின் சக்தியாக ஒரு அரசியல் இயக்கம் வளரும்போது—நன்மைகளுமுண்டு; தீமைகளும் ஏற்பட நேருவதுண்டு.

மக்கள் கூடக்கூட, பிரச்னைகளும் பெருகும்—கருத்தலைகளும் மோதும்–ஒவ்வொருவர் அபிப்பிராயத்தையும் கேட்டு, காரியங்கள் செய்ய நேரும், சர்வாதிகாரத் தலைமை நிலவும் இடங்களில், இவை சாத்யமாகா! அதனால் தான், ஒருவருக்கே, கட்டுப்படும் அரசியல் இயக்கங்கள், அரும்பிய நிலையிலேயே காலந்தள்ளிடும் 'கதி'யை அடைகின்றன.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம், அரும்பிய நாள் முதல் மக்களின் கருத்துக்கு மகோன்னதமான சிறப்பை அளித்து வந்திருக்கிறதென்பதை, யாரும் மறுக்க முடியாது. பலர் செய்த கூட்டு முடிவை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குப் பிணைத்துக் கொண்டதால்—பழகிய சிலரைக் கூடக் கழகம் இழக்க நேரிட்டிருக்கிறது! கொள்கைக்கு ஊறுதேடும் வகையில் நடக்க முயற்சித்த காரணத்தால், நெடுநாளைய நண்பர்களைக்கூட பிரிந்து செல்ல நேரிட்டிருக்கிறது!! காரணம், கழகத்தின் உறுப்புகளான, கிளைக்கழகங்களின் முடிவுப்படியே காரியங்கள் நடைபெறவேண்டும் என்பதில் தலைமைக் கழகம் கொண்டிருந்த அசையாத நம்பிக்கைதான.

அப்படிக்காரியங்கள் நடைபெற்றால் தான், மக்கள் இயக்கம் வளர முடியும்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்பு மதுரையில் கூடிய பொதுக்குழு, எடுத்த முடிவுகள் எல்லோருக்கும் தெரியும்! ஆனால், அந்த முடிவுகளை எடுக்குமுன்னர், பொதுச் செயலாளர் ஒவ்வொருவரையும் அழைத்து அவர் தம் கருத்தைக் கேட்டதும்—பிறகு, இன்னின்னார் இன்ன கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று விளக்கியதும், பின்னர் முடிவெடுத்ததுமான சம்பவங்களையாரும் மறந்திருக்கமாட்டார்கள். இன்றுவரை, அப்படித்தான், பொதுக்குழுவில் நடைபெற்று வருகிறது.

காரணம், ஜனநாயகம்—நமது நாட்டிற்குப் புதியசொல்! ஆண்டானுக்கு அடிமைப்பட்டும், வல்லான் வகுத்ததேவாய்க்கால் என்றும் பழகிப்போன ஒரு நாட்டில், ஜனநாயகத்துக்குத் தக்க இடத்தைத் தேடித் தருவது சாமான்யமானதல்ல; அதிலும், ஏராளமான மக்கள் சக்தியால் இயக்கப்படும் ஒரு அரசியல் இயக்கத்தில், ஜனநாயக முறையை அமுல் நடத்தும்போது, விபரீதங்கள் கூட விளைவதுண்டு.

அந்த விபரீதங்கள், 'சொந்த பிரச்னை' ஆகாமலிருக்கும் வரையில் நல்லது; 'கொள்கைப் பிரச்னை' என்ற வகையில் இருந்துவிட்டால், நல்லது; அதைவிட்டு, 'உனக்கா! எனக்கா!!' என்று பலப்பரீட்சை பார்க்குமளவுக்குச் சென்றுவிட்டால், அது ஜனநாயகமுமல்ல! வளர்ச்சியின் அறிகுறியுமல்ல!! ஜனநாயகத்தின் ஆரம்பக் கட்டத்திலிருக்கும் நாட்டில், ஏழைகள் கட்சியான நாம், அதனை அமுல் நடத்த முடியுமா என்று பயந்தோரும் உண்டு — நம்மிடையில். 'இவ்வளவு சுதந்திரம் இருக்கக்கூடாது' என்றோரும், உண்டு. ஆனால், அவர்கள் பயமெல்லாம்பறக்குமளவில், ஒவ்வொருகிளைக்கழகங்களும் மாவட்டக் கழகங்களும் தேர்தலை நடத்தியிருக்கின்றன.

தத்தமது கழகத்தைக் கட்டிக்காக்கும், நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கின்றன,

"ஒவ்வொரு ஊரிலும் போட்டியிருந்ததாமே! ஒரே கட்சிக்குள் 'நான்தான் வருவேன்! நான்தான் வருவேன்!' என்றுசொல்லலாமா?"—என்று கேட்க நினைக்கலாம், சிலர். உண்மைதான்! மாவட்டச் செயலாளர்களாகவருவதில் போட்டி, பொதுக்குழுவுக்கு வருவதில் தேர்தல் முறை, கிளைக்கழகச் செயலாளராக நிற்பதில் வோட்டெடுப்பு—என்றுதான், கடந்த ஒரு திங்களாகக் கழகத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன,

இது, நல்லதா?—எனலாம், சிலர். அவர்கள், ஜனநாயகத்தை அறியாதவர்கள்!

ஒரே ஒருத்தரின் வழிப்படி, எதற்கும், 'ததாஸ்து' போடுவதற்குப் பெயர், ஜனநாயகம் அல்ல; அது சர்வாதிகாரம்.

போட்டியிருப்பதுதான், ஜனநாயக முறைக்கே, அழகு. அப்போதுதான் பொறுப்பு ஏற்பவர்களுக்கு, அதைச் சரிவரச் செய்யவேண்டுமே என்ற அச்சமும் ஆசையும் ஏற்பட முடியும்.

இந்தப்போட்டி எங்கு கொண்டு போய்விடும்!—என்று, கவலைப்படுவோருண்டு. திராவிட முன்னேற்றக் கழகம், 'அரசியல் அல்வா'வைக் கிண்டிவைத்து வழங்கிக் கொண்டிருக்கும் இயக்கமல்ல; தியாக முத்திரைகளை உடம்பிலே ஏந்திக் கொள்ளும் நிலையில், சிறையில் ஒரு காலையும் வீட்டில் இன்னொரு காலையும் வைத்துக் கொண்டிருப்போரின் கழகம்! இங்கே போட்டி? எதற்கு! கட்சியை, வளர்க்க!!

இந்தப்போட்டி, புகைச்சலுக்கு நிச்சயம் வித்திடாது — கொள்கைக்காக வாழ்வோர், குனிந்தோடிடும் பண்பு கொண்டவர்களுமல்ல—இதில் தக்க பயற்சி கொண்டவர்கள் நமது தோழர்கள் என்பதையே, கழகத் தேர்தல்கள் சொல்லுகின்றன.

ஜனநாயகப் பண்பு மிளிரக்கூடும் கூட்டுத் தோழர்களுக்கான, அதற்காகக் காத்திருந்த நமக்கு களிப்புண்டாகாமாமலா இருக்கும்? களிக்கிறோம்! மகிழ்கிறோம்!!

24ந் தேதியன்று, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கெனப் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் முக்கிய பணியும் நடைபெற இருக்கிறது.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழுவினர் அனைவரும்கூடி, கழகத்தின் புதிய பொதுச் செயலாளரையும் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்.

புதியவர்! புதிய பொறுப்புக்கு இடம் அளிக்கப்படலாம்! — என்று, எல்லோராலும், எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, வருகிற 24ந் தேதி, கழக வரலாற்றில் முக்கியகட்டம். அன்றைய தினம், சென்னையிலே கூடும் கொள்கைக் குன்றுகளை யெல்லாம், நாவார மனமார, வாழ்த்தி வரவேற்கிறோம்.

அன்றைய தினம், அடுத்து நாம் நடத்த இருக்கிற மாநில மாநாட்டுக்கான வரவேற்புக் குழுவும் அமைக்கப்படக்கூடும்.

கழக மாநில மாநாடு!-நாடு சென்று கொண்டிருக்கிற பாதையை நோக்கும்போது, நமது மாநில மாநாட்டிலே, நாம் சாதிக்க வேண்டிய மகத்தான காரியங்கள் எவ்வளவு இருக்குமென்பது விளங்கும்.

காங்கிரஸ் பாசிசம் பாயும் குணத்தை மாற்றிக்கொண்டு, பசப்பிய வண்ணம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் வழிவகையில் ஈடுபட்டிருக்கிறது.

அதனை எதிர்த்து வாகைசூட வேண்டுமானால், கழகங்கள் ஒவ்வொன்றும்: தியாகக் கோட்டைகளாக வேண்டும்-கழகக்காளையர் ஒவ்வொருவரும், வீட்டுக்கு ஒரு வீரர்களென விளங்கவேண்டும்.

வீரருக்கு, போர்க்களம் என்பது நிலாச் சோறுபோல! — எனவே, அப்படிப்பட்ட அறப்போராட்டக் கட்டங்கள் பல ஏற்படக்கூடும். அத்தகையை முடிவுகளையெல்லாம் எதிர்காலத்திலே எடுக்கப்போகும், பொதுக்குழு, கூடப்போகிறது—முதல் முறையாக!! முக்கிய, பணிகளையும் செய்யப் போகிறது.

இலட்சியக் கோட்டை—அதோ!
வீரர்கள், நாம்!!
தோல்வி கண்டிராத இனம்!
துந்துபி முழக்கத்தயார்!!

எனும், போர்ப்பரணியே, நமது உள்ளமெல்லாம் கேட்கிறது. அதனால் கொள்கிறோம் உவகை! கொள்கை வீரர்களை அழைக்கிறோம், சென்னைக்கு!!

வருக! நல்முடிவு காண்க! நாடு விடுதலையடைய நல்ல பணிபுரிக! பூக்கும் மக்களாட்சிப் பண்பை பொலியச் செய்க!! வீரவணக்கம், அனைவருக்கும்.

★

## அவர்களுக்கு

—★—

வடநாட்டு ஆதிக்கம் என்று நாம் சொல்லும்போது, கண்ணில் தென்படும் ஒவ்வொரு வடநாட்டாரையும் கத்திகொண்டு குத்தி எறியும் ஆத்திரத்துடன் நாம் கூறுவதாக வன்கணாளர்கள் சிலர் கருதிக் கொண்டுள்ளனர்.

அந்தக்கருத்தின் காரணமாகவே துவேஷமும் வேற்றுமையும் கொண்டு முளைக்கும் முழக்கம் நம் கோரிக்கை என்று ஏசுகிறார்கள்; பேசுகிறார்கள்.

அவர்தம் சிந்தனைக்கு இதோ ஒரு வாசகம்—செப்பியவர், இந்தியப் பிரதமர் பண்டித நேரு. பஞ்சாப் படுகொலை!—என்று, காங்கிரஸ்சரிதம் சித்தரிக்கும் ஜாலியன்வாலாபாக் துப்பாக்கிப் பிரயோகம் குறித்து, சொல்லியிருக்கிறார்.

கோரமான படுகொலை! மக்களை மடக்கி மடக்கிச் சுட்டான், வெள்ளைத் துரைமகன். அந்த நிகழ்ச்சியை, இப்போது நினைப்பினும், நெஞ்சம் நெருப்பாகும்! காங்கிரஸ் வெற்றிக்கு, அந்தக் கொலை, அருமையான பிரச்சாரவாளாக இருந்தது. அதைப்பற்றி எகிப்து பிரதமரான நாஸருக்கு டில்லியில் 13ந் தேதி நடைபெற்ற வரவேற்பின்போது குறிப்பிடுகிறார் நேரு, "இன்று, ஜாலியன் வாலாபாக் தினம். இத்தினத்தை ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம். தாளாத சோகத்துடன்; அல்ல, வருத்தத்தோடா; அல்ல. இப்படிச் செய்தானே, என்ற ஆத்திரத்தோடா; அதுவல்ல. இவையெல்லாம், இந்திய சுதந்திரமடைந்தபின், நம்மைவிட்டு அகன்றுவிட்டது. சுதந்திர வரலாற்றில் ஒரு முக்கிய தினம் என்கிற அளவிலேயே, நாம் இப்போது அந்த நாளைக் கொண்டாடுகிறோம்,!

சுதந்திரம் முகிழ்த்ததால், வெள்ளையர் மீதிருந்த கோபம்—துக்கம்—சோகம், அனைத்தும் போய்விட்டதாம்! அறிவிக்கிறார், நேரு!!

அரசியல் விவேகம் நிரம்பிய வார்த்தை. வெள்ளையன் வெளியேறிவிட்ட இப்போதும், அவர்கள் மீது ஆத்திரமும் துக்கமும் கலக்கச் சிறினால், அரசியல் உறவுதான் கெடுமே ஒழிய அதனால் எந்தவித பலனும் ஏற்பட முடியாது. இந்த நிலைமை விடுதலைபுரிப் பிரயாணிகள் அனைவருக்கும் சொந்தமானதாகும். அமெரிக்கர் கொண்டாடும் சுதந்திர தினத்தைக் கண்டு, பிரிட்டிஷார் ஆத்திரமடைய முடியாது; நம் ஆதிக்கத்திலிருந்து விலகிய நாளைக் குதூகலத்துடன் கொண்டாடுகிறார்களே, என்று. அதேபோல, நெபோலியனை வீழ்த்திய நாளைக் கொண்டாடும் பிரிட்டனைப் பார்த்து, பிரான்சும் வயிறெரிய முடியாது. விடுதலைப் போரில், பிடிவாதம் செய்யும் ஆதிக்கக்காரன், எதிரியாகத்தானிருப்பான். பயணம் முடிந்ததும், அவனே நண்பனாகக்கூட இருக்கக்கூடும்,

இதைத்தான் பண்டிதநேரு சுட்டிக்காட்டுகிறார், தன்னுடைய விளக்கத்தின்மூலம்!

இதனை அறியாமல், வன்கணாளர்கள், விடுதலை விரும்பிகளான நம்மை வெறியர்களென்றும், பேத மூட்டுபவர்களென்றும் பேசித் திரிகின்றனர். இந்தப்பேச்சு பேதைமையின் விளைவு! நாம் விரும்புகிறோம், விடுதலை பெற. அதனை, மறுக்க முடியாதபோது, ஆத்திரத்தால் எடுத்தெறியும்வார்த்தை அம்புகள் இவை; அர்த்தமுள்ள சொற்கள் அல்ல.

முட்டாள்தனம், பைத்யக்காரத்தனம் என்று சொல்லும் பண்டிதநேருகூட விடுதலைபெற்ற திராவிடத்தின் தலைவருடன், கைகுலுக்கும் காலம் வரலாம்! அத்தகைய பொற்காலம் பூக்கவேண்டும் என்பதற்காக, நாம் போராடிக்கொண்டிருக்கிறோமே யொழிய, பண்டிதரின் பரம்பரையையே ஒழித்துவிட்டு, பார்ப்பனீயத்தின் தலைமுறையையே பிணக்காடாக்கியெறிந்துவிட்டு, திராவிட இனமாகிய நாம் மட்டும் உயிர்வாழ்வதற்கல்ல. தூற்றும் தோழர்கள், இதனை அறியவேண்டும் — நமது குரல், விடுதலைபெற! புதுவாழ்வுபெற!! வெறுப்பை யூட்டவும், துவேஷத்தை வளர்க்கவும் அல்ல.

★

# அரசியற் கருத்துக்கள்

## [ அன்று முதல் இன்று வரை ]

[பேராசிரியர் இருதயராஜ்]

பிக்டே

கான்ட் சொல்லுவதைப் போலவே பிக்டேயும் மனிதனுக்குச் சிந்தித்து விரும்பியதைச் செய்ய உரிமை உண்டு என்று கூறினார். ஆனால் இந்த உரிமை, ஒவ்வொருவனும் மற்றவர்களுக்கும் தன்னைப் போலவே உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுவதில் அடங்கியிருக்கிறது. அறிவுள்ளமக்கள், தங்களுடைய சுதந்திரம் தங்களோடு வாழும் மற்றவர்களுடைய சுதந்தரத்தால், கட்டுப்பட்டதென்பதை ஏற்றுக் கொண்டு, தங்களுடைய சுயேச்சையான தனித்தனி விருப்பத்தை எல்லாம் ஒன்று சேர்த்து ஒப்பந்தத்தின் மூலம் பொது விருப்பமாக மாற்றிக் கொள்ளுகின்றனர். அதனால் தங்களுடைய சுயேச்சையான செயல்களுக்கு விதிக்கப்படும் தடைகள் தங்களாலேயே விதிக்கப்பட்டதென்று எண்ணிக்கொள்ளுவது சாத்தியமாகிறது. சமுதாயம் ஏற்படுவதற்குமுன் இருந்ததாகச்சொல்லப்படும் இயற்கை நிலை என்பது இருந்திருக்கவே முடியாது. ஏனெனில் சமுதாயத்தில் வாழ்வதுதான் மனிதனுக்கு இயற்கையான வாழ்க்கை என்பது பிக்டேயின் கருத்து. சமுதாயத்தில் ஒரு அங்கமாகத் தான் இருப்பதா, சமுதாயத்துக்கு வெளியே தனித்திருந்துவாழ்வதா என்று முடிவு செய்வதற்கே எவருக்கும் உரிமையில்லை. பலாத்காரத்தின் விளைவாகத்தான் சமுதாயம் தோன்றியிருக்கமுடியும் வரம்பில்லாத சர்வாதிகாரமுடைய ஒருவனுடைய ஆட்சியிலிருந்துதான் அரசாங்கமே தோன்றியிருக்கும். அந்தசர்வாதிகாரிக்கு அவனுடைய மனச்சாட்சியைத் தவிர வேறொரு தடை இருந்திருக்க முடியாது. அவனுக்குத்தான் எல்லா உரிமைகளும் உண்டு. மற்றவர்களுக்கு எந்த உரிமைகளோ வேறு சுதந்தரமோ கிடையாது. அரசு என்று சொல்லப்படும் அமைப்பில், மனிதன் என்பவன், சொல்லுகிறபடி செய்யும் கருவியைப்போல. அந்தக் கருவியைக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. இவ்வாறு பிக்டே கூறியதிலிருந்து அரசை உயர்த்தி, அதன் பெருமையை நிலை நாட்டும் பொருட்டு, தனி மனிதனின் சுதந்தரத்தையும் உரிமைகளையும் விட்டுக் கொடுக்கத் தயாராயிருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஹெகல் 1770—1831

சமூக ஒப்பந்தத்தின் விளைவாக அரசு தோன்றியது என்ற கொள்கையை ஹெகல் ஒப்புக்கொள்ளவில்லை. அரசு என்பது இயற்கையாக வளர்ச்சி அடையும் ஒரு அமைப்பு. முழு அறிவுள்ள ஒரு ஆளைப்போல அரசு என்பது. இயற்கை உரிமைகளையுடைய பல பேர்களைக் கொண்டதல்ல அரசு. அரசு வேறு, தனி மனிதன் வேறல்ல. அரசியல் இருப்பதால் தான் அவன் மனிதனாக வாழ முடிகிறது. அரசு என்பது உண்மையான, கடவுள் என்றுகூட ஹெகல் கூறுகிறார்.

ஒருவனுடைய சுதந்தரம் அரசியலமைப்பில் வெளிப்பார்வைக்கு கட்டுப்பட்டிருப்பதைப்போல் தெரிந்தாலும், அவனுடைய விருப்பம்போல் எதையும் செய்வதற்கு சுதந்தரம் இல்லை என்று ஒருவன் கருதினாலும், அவனுடைய உண்மையான சுதந்தரம் அரசில் ஒரு அங்கமாய் இருப்பதால்தான் அவனுக்குக் கிடைக்கிறது. ஒருவனின் உண்மையான சுதந்தரம் அரசில்தான் காப்பாற்றப்படுகிறது. உண்மையான சுதந்தரம் என்பது முதன் முதலில் சட்டத்தில்தான் வெளிப்படையாககாணக்கிடக்கிறது. சமுதாயத்தில் ஒருவன் வாழ்வதால் அவன் கற்றுக்கொள்ளும் நல்லொழுக்கப் பண்பில் இரண்டாவதாக அதைக் காணலாம். மூன்றாவதாக உண்மையான சுதந்தரம் என்பது சமூகத்தில் இருக்கும் பலவித அமைப்புகள், மக்களுடைய பண்புகளை வளர்க்கக்கூடிய எல்லாவிதமான சுற்றுச்சார்புகள் இவைகளிலேயும் காணக்கிடக்கிறது.

அரசு என்பது தனி ஒரு ஆளைப் போலவே உள்ளது. ஆதலால் அதற்கு உண்மையான விருப்பம் என்று இருக்கிறது. அதன் விருப்பத்தில் அதில்வாழும் எல்லா மக்களுடைய விருப்பங்களும் அடங்கியிருக்கின்றன. அதில், வாழும் மக்கள் எத்தனை பேராயிருந்தாலும், அவர்களைத் தனித்துச் கணக்கெடுக்க முடியாது. அரசு என்ற ஆளிலே அவர்களெல்லாம் அடக்கமாயிருக்கிறார்கள். மனிதருக்கு இருக்கும் உரிமைகளெல்லாம் அரசிலிருந்து பிறந்தவைகளே, அதனால் மக்களுக்கும் அரசுக்கும் என்றுமே

வேற்றுமை இருக்க முடியாது. மக்களிடம் முடிவான சர்வ அதிகாரம் இருப்பதாகக் கருதுவது, மக்களுடைய உரிமைச் சாசனம் என்று எதையோ ஏட்டில் ஏற்றிக்கொள்ளுவது இவைகளெல்லாம் தவறானவை என்று ஹெகல் கருதினார்.

ஹெகலுடைய கருத்துக்கள் ரூசோவிடமிருந்து பெற்றவை. ஒவ்வொருவருக்கும் இருவகை விருப்பங்கள் உண்டு. ஒருவன் ஏதாவது செய்ய விரும்புகிறானென்றால் அதுவே அவனது உண்மையான விருப்பம் என்று சொல்ல முடியாது. சட்டத்தை மீற நினைக்கிறான் ஒருவன். அது அவனுடைய உண்மையான விருப்பம் அல்ல. தன் உண்மை விருப்பத்துக்கு மாறாக அவன் நடக்கிறான் என்றுதான் பொருள். உண்மையில் அவன் சட்டத்துக்கு அடங்கியே நடக்கவேண்டுமென்று எண்ணுவான். ஆக அவனுக்குத் தீய எண்ணங்களும், தூய எண்ணங்களும் இருக்கின்றன. அவன், அவனைப்போன்ற மற்றவர்களுடைய உண்மையான விருப்பங்கள், தூய எண்ணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் பொது விருப்பம் என்று தோன்றுகிறது. அதனால்தான் பொது விருப்பத்தால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று ஒருவனுடைய உண்மையான விருப்பம் இருக்கும். அவனுடைய தீய எண்ணந்தான் சட்டத்தை மீறவைக்கிறது. சட்டத்தை மீறியதற்கு தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டனை பொது விருப்பத்தால் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பொது விருப்பத்தில் அவனுடைய உண்மையான விருப்பமும் இருக்கிறது. அதாவது ஒருவன் தவறாக நடக்கும்போது அதற்குக் காரணம் அவனது தீய எண்ணம், விருப்பம். அவனுடைய உண்மை எண்ணம், விருப்பம், பொது விருப்பத்தில் சேர்ந்துகொண்டு அவனுக்கே தண்டனையை விதிக்கிறது. ஆகவேதான் குற்றவாளியை அரசாங்கம் தண்டிப்பதில்லை. அரசாங்கத்தின் மூலமாக தன்னைத்தானே தண்டித்துக்கொள்ளுகிறான். அவனுடைய தூய எண்ணம், அவன் தீய எண்ணங்கொண்டதற்தாக அவனைத் தண்டிக்கிறது. அவனுடைய வெளிப்படை விருப்பம் தவறுசெய்யத் தூண்டுகிறது. அவனுடைய அந்தரங்க விருப்பம், பொது விருப்பத்தின் மூலம் அவனுக்குத் தண்டனை விதிக்கிறது.

இந்தப் பொது விருப்பத்தின் இருப்பிடம்தான் அரசு என்பது என்கிறார் ஹெகல். "மனித வாழ்க்கையின் இலட்சியம் நல்வாழ்வு, அதை அடைவதற்கு அரசு என்பது ஒரு சாதனம்" என்று இதுவரை அரசியல் அறிஞர்கள் சொல்லிவந்ததற்குமாறாக, ஹெகல், "அரசு என்பதே ஒரு பூர்ணமான இலட்சியம். நல்லொழுக்கம் மனித உரிமை எல்லாவற்றையும் நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்தது. மனிதருடைய அறிவு அரசியலில்தான் முற்றுப்பெறுகிறது. அதனால் அரசைப் பார்த்துக் குறைசொல்லுவதோ, அதன்மேல் தவறு கற்பிப்பதோ கூடாது. அது கடவுள் போன்றது. குற்றம் செய்ய முடியாதது" என்றும் கூறுகிறார்.

மக்களுக்காக அரசு இருக்கிறதே தவிர, அரசுக்காக மக்கள் வாழ்வதில்லை. மக்களின் நல்வாழ்வே அரசின் நோக்கமே தவிர, அரசின் நலமே மக்கள் வாழ்க்கையின் நோக்கமல்ல. ஆனால் இவைகளையெல்லாம் மறுத்து நேர்மாறாகப் பேசுகிறார் ஹெகல்.

ஒரு அரசின் முடிவான சர்வ அதிகாரம் மக்களுடைய கையில் இல்லை. அரசு என்னும் அமைப்பில் இருக்கிறது. இந்த அமைப்பு வெளிப்படையாக ஒரு ஆளின் தோற்றத்தில்காணப்படவேண்டும். அதுதான் மன்னன். ஆகவே ஒரு அரசின் முடிவான சர்வ அதிகாரம் பரம்பரையாக ஆண்டுவரும் மன்னனுடைய கையில் இருக்கிறது.

அரசாங்கத்தில் மூன்று பகுதிகள் உண்டு. அவை, சட்டம் செய்யும் பகுதி, நீதி பரிபாலனத்தை உள்ளடக்கி நிர்வாகம் செய்யும் பகுதி, மன்னர் பகுதி என்பவை. முதல் இரண்டு பகுதிகளையும் உறவுடன் வேலை செய்யும்படி பார்ப்பதே மன்னர் வேலை. மான்டஸ்க்யூ சொல்லுவதைப்போல் இம் மூன்று பகுதிகளையும் பிரித்து வைக்கக் கூடாது. அரசு என்பது கட்டுக்கோப்பான ஒரு அமைப்பு. அதில் பிரிவினைகள் கூடாது. உதாரணமாக, மக்கள், நிர்வாகிகள், மன்னர் எல்லோருமே சட்டம் செய்வதில் சேர்ந்து பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு அரசுக்கும் ஒரு தனி ஆள் தன்மை இருப்பதனால் சர்வதேச அமைப்பில் பிற அரசின் தலையீடின்றி அரசுகள் தனித்து வாழவேண்டும். மாக்கியவல்லி சொல்லுவதைப்போல் நல்லொழுக்கச் சட்டங்கள் மனிதருக்குத்தானேயன்றி அரசுகளுக்கல்ல. மனிதர் செய்தால் தவறென்று கருதப்படுவதையே அரசு செய்தால் தவறாகாது. இரண்டு அரசுகள் தங்களுக்குள் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டால், அதை நிரந்தரமான ஏற்பாடாகக் கருதக் கூடாது. போர்நிலை ஒவ்வொரு அரசுக்கும் அவசியம் தேவை. பிற நாட்டுடன் போரின்றி எப்பொழுதும் அவைகளுடன் சமாதானத்தில் வாழ்ந்தால், அதனால் உள்நாட்டில் சமாதானம் இருக்காது; முன்னேற்றம் இருக்காது. அடிக்கடி போர்நிலை ஏற்பட்டால்தான் ஒரு அரசின் மக்கள், போரைத் திறனுடன் நடத்துவதிலும் பிற

"எடுத்துக்காட்டாக விளங்க வேண்டிய டில்லி சர்க்கார், இலாகாவுக்கு இலாகா, வேலைக்கு வேலை பட்சபாதம் காட்டுகிறது. உதாரணமாக, ரயில்வேயில் உத்தியோகம் செய்கிறவர்களுக்குப் பிரயாணம் செய்ய இலவச அனுமதிகள் தரப்படுகிறது. அதுபோல, தபால் தந்தி இலாகாவில் வேலை பார்ப்பவர்கள், இலவசமாகவே தந்திதபால்களை அனுப்ப அனுமதிக்கப்படுவதில்லை. ஏன் இந்த பட்சபாதம். வேலை செய்பவர்களுக்கு வசதிகளைச் செய்வதில் உண்மையாகவே அக்கரையிருந்தால் அந்த வசதிகள் எல்லா இலாக்காக்களிலும் இருப்போருக்கு செய்து தரப்படவேண்டும். இது பற்றி, டில்லி, நன்றாக யோசிக்க வேண்டும். இந்த விஷயத்தை நினைக்கும்போது, மத்திய சர்க்காரிலிருக்கும் அதிகாரிகளுக்குக் கிடைக்கும் சாதாரண வசதிகள் கூட மாகாண சர்க்காருக்குக் கிடைப்பது இல்லை. இதென்ன! எல்லா வகைகளிலும் ஏமாற்றப்படுவோர்களாகத்தானே மாகாண சர்க்கார்களும் — குறிப்பாக தெற்கிலிருக்கும் நாங்களும் இருக்கிறோம்?"

—பி. டி. தாணுப்பிள்ளை எம். பி, (காங்கிரஸ்) பார்லிமெண்டில்



# பேரறிஞர் ஐன்ஸ்டின் மறைந்தார்

அணுகுண்டை எந்த வகையில், எந்தக் கோணத்தில் எப்படி உபயோகித்தாலும், அதனால் நாட்டுக்கு நாசமேயொழிய, நன்மை எதுவும் ஏற்படப்போவதில்லை என்று தைரியமாகக் கூறிய பேரறிஞர் ஐன்ஸ்டின் அவர்கள், தமது 76-வது வயதில் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி அறிவுலகத்துக்கு ஒரு பெரும் அதிர்ச்சியைத் தந்துவிட்டது. போர் வெறி கூடாது, அதனால் நாடு நாசமடையுமென்று நாட்டவர்க்கு நல்லுரை கூறிய ஒரு அறிஞரை உலகம் இழந்துவிட்டது. உடலைவிட்டு உயிர் பிரிவதற்கு முன், அவர், பக்கத்திலிருந்தவர்களை நோக்கி, "என்னுடைய சடலத்துக்கு எந்தவிதமான சடங்குகளும் செய்ய வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். இப்படிப்பட்ட ஒரு விஞ்ஞானப் பகுத்தறிவுவாதியை நாம் இழந்துவிட்டது—நாடு இழந்துவிட்டது உண்மையிலேயே மறக்க முடியாத ஒரு சம்பவமாகும். வாழ்க அவர் புகழ்.

அரசின் தோல்வியை விரும்புவதிலும் ஒற்றுமையாயிருந்து, உள்நாட்டு விவகாரங்களில் அதிக அக்கரைகாட்டாமல் யுத்தத்தைப்பற்றி சதா நினைத்துக்கொண்டு சுறுசுறுப்பாக இருப்பார்கள். புதிய புதிய போர்க் கருவிகளை உண்டாக்குவதிலும் மற்ற அரசுகளைவிட வேகமாக முன்னேறுவதிலும் விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று வெகல் கருதினர்.

(தொடரும்)

4-பக்கத் தொடர்ச்சி

"அய்யரே! நீர் தமிழில் மந்திரம் சொன்னால்தான் காசு தருவோம்" என்று இளைஞர்கள் அறப்போர் நடத்தவேண்டுமாம். உடனே அர்ச்சனை தமிழில் நடைபெறுமாம்.

நாமும் இதனை நெடுங்காலமாகத்தான் கூறிவருகிறோம்.

சைவர்களால் கொண்டாடப்படும் தேவார திருவாசகங்கள் எல்லாம், சிவனருளைப்பெற்ற சைவ சமய ஆசிரியர்களால்—சிவனைப் போற்றியும், புகழ்ந்தும், வாழ்த்தியும் பாடப்பெற்ற பாடல்களாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தப் பாடல்கள் எல்லாம் பண்டாரப் பாடல்கள் என்றும் இவற்றைச் சிவன் கோயில்களில், நடைபெறும் பூசைவிழாக் காலங்களில் பாடக்கூடாதென்றும் பார்ப்பனப் பூசாரிகள் ஏற்படுத்தி வைத்திருக்கும் ஆரியக்கொள்கை இன்னும் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் நடைமுறையில் இருந்து வருவதோடு, வடமொழி மந்திரங்களைக்கொண்டே சிவனுடைய காரியங்கள் எல்லாம் நடைபெற்றும் வருகின்றன. உண்மையாகவே சிவன் தமிழர் கடவுளும் தமிழ்மொழியில் விருப்பமும் உடையவராய் இருந்தால், தம்முடைய அருளினைப் பெற்றோரே அடியெடுத்துக் கொடுத்த—தம்மையே புகழ்ந்து பாடப்பெற்ற தேவார திருவாசகங்களைத் தம்முடைய முன்னிலையில் பாடக்கூடாதென்ற ஆரியக்கொள்கையின் அடிவயிற்றில் நெருப்பிட்டு, வடமொழி மந்திரங்களின் மண்டையில் அடித்து, தமிழ் மக்களைக் கொண்டே, தமிழ் மொழியிலேயே, தம்முடைய காரியங்கள் எல்லாம் நடைபெறும்படி செய்திருக்க வேண்டும். இவ்வாறு செய்திருந்தால், "எங்கள் சிவன்! எங்கள் சைவம்" என்று பேதைமையால் பிதற்றித்திரியும் சில தமிழ்ப்புலவர்களின் மானமாவது ஒருவாறு காப்பாற்றப்படும். அதுமட்டுமல்ல; வடமொழி வழங்காத தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் தமிழ் மக்களுக்குப் புரியாத வடமொழி மந்திரங்களைக்கொண்டு சிவனுடைய காரியங்கள் எல்லாம் நடைபெற வேண்டுமானால், அப்படிப்பட்ட அந்தக் கடவுள் வடமொழியாளர்க்குரிய கடவுளாவாரே யன்றி, ஒருபோதும் தமிழ் பேசும் தமிழ் மக்களுக்குரிய கடவுளாகார் என்பதனை யாவது, சைவத்திற்காகவும், சிவனுக்காகவும் பரிந்து பேசும் தமிழ்ப் பெரியவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. இது மட்டுமல்ல; தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் எல்லாம் தமிழ் மக்களின் பணத்தைக் கொண்டே அமைக்கப்பெற்றன என்பதும், அங்கெல்லாம் நடைபெறும் பூசை விழாச் செலவுகள் எல்லாம் தமிழ் மக்களுடைய பணத்திலேயே நடைபெறுகின்றன என்பதும், இங்ஙனம் தமிழ் மக்களின் செலவில் எல்லாக் காரியங்களும் நடைபெறும் கோயில் எதிலும், தமிழ் மக்கள் நுழையவோ அன்றித், தமிழ்மொழியில் காரியங்களை நடத்தவோ முடியாமல் இருப்பதன் காரணத்தையாவது சைவத் தமிழ்ப் பெரியார் எவரும் தினைத்துணையும் தம் அறிவுக்கு வேலை கொடுத்து ஆராய்ந்து பார்ப்பதில்லை. வறிதே, வடமொழியைத் தேனெனப்பருகி—ஆரியக் கொள்கையைக் கற்கண்டெனச்சுவைத்து

மகிழும் இவர்களை எப்போது—எப்படிச் சீர்திருத்துவது என்ற தூய எண்ணத்துடன், தமிழும் தமிழ் மக்களும் தன்மதிப்போடு வாழ வேண்டுமென்பதற்காகவே நம்முடைய உழைப்பு முழுவதையும் பயன்படுத்தி வருகிறோம்.

ஆனால், எப்போதாவது ஒரு நாள் திடீரென்று ஏற்படும் உற்சாகத்தினால் வீர முழக்கம் செய்து எந்தக் காரியத்திலும் வெற்றி பெற்றுவிடலாம் என்று நினைக்கும் ஏமாளிகளல்ல நாம்.

உழைப்போம்! உடல் அலுக்கும் வரை உழைப்போம்! உயிர் இருக்கும் வரை உழைப்போம்! உரிமை பெறும் வரை உழைப்போம்! என்ற உன்னதமான—உயரிய இலட்சியத்தோடு பணியாற்றுபவர்கள் நாம்.

காட்டாறல்ல! உயிராறு! உழைப்பினாலன்றி உயர முடியாதென்ற கொள்கையுடையவர்கள் நாம்.

எனவேதான், எந்தக் காரியத்தையும் பேச்சோடு நிறுத்திக் கொள்வதில்லை—செயலில் இறங்கி வெற்றி காணும்வரை போராடுபவர்கள் நாம் என்று கூறுகிறோம்.

நாட்டின் பொது நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றிவரும் நம்முடன் சில காட்டாற்றுப் போக்கினர் மோதிக் கொள்ள வரும்போது, அவர்கள் யாராய் இருந்தாலும், அவர்களைக் கண்டிக்கவும் திருத்தவும் வேண்டியவர்களாகிறோம். அந்தச் சமயத்தில், யார் அவர்? நரசிம்மாச்சாரி யாரா? நடேசமுதலியாரா? என்று பார்ப்பதில்லை — பார்க்கக் கூடாது —பார்ப்பது தவறு. நாட்டுக்குத் தீங்கு செய்பவர் நம்மவராய் இருந்தால் நாவாரப் புகழ்வதும், எதிரியாக இருந்தால் வாயார வைவதும் தமிழ் மரபுக்குப் புறம்பான ஒன்றாகும்.

எனவேதான், "எதை எல்லாமோ அழிக்கிறார்களே, இதை அழிக்கக் கூடாதா" என்று கேட்டவரையும் வன்மையாக ஆனால் உரிமையோடு கண்டிக்கவேண்டியவர்களாகிறோம்.

நாம் எதையெதையோ அழிக்கிறோமாம்! அதை அழிக்கவில்லையாம்! இந்தி எழுத்துக்களை அழிக்கிறோமாம், டால்மியாபுரத்தை அழிக்கிறோமாம்! சௌகார்ப்பேட்டையை மாற்றவேண்டுமென்கிறோமாம்! இது கூடாதாம்! அதுவேண்டுமாம்!

இந்த மாயாவரம் பெற்றவர் மாய வரத்தை அழிக்க நம்மை அழைக்கிறார்.

நாம் மாய வரம்பெற்றவர்களின் நிலையை மாற்றப்பாடுபடுகிறோம்.

மாயவரம்! இந்தத் தமிழ் நாட்டில் பல ஆயிரக்கணக்கானவர்கள் மாய்வதற்கே வரம் கேட்டு வந்தவர்களைப் போல் காட்சியளிக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மனிதராக மாறவேண்டும்—மகேசனின் தொடர்பிலிருந்து அறுபடவேண்டும்—மானத்தோடு வாழவேண்டும்—இதற்கு மாயவரம் குறுக்கே வரக்கூடாது என்று கருதிப் பணியாற்றுகிறோம்.

எத்தனையோமுறை புகைவண்டியில் இவர் போனாராம்—வந்தாராம். அப்போதெல்லாம் மாயவரம் அப்படியே இருக்கிறதாம்! யாரும் அதனை அழிக்கவில்லையாம்! எதை எல்லாமோ, அழிக்கிறார்களாம்! அதை அழிக்கவில்லையாம்!

எத்தனையோ தடவை இவர் அந்த வழியாகப் போனாராம்! வந்தாராம்! மாயவரம் மாயவில்லையாம்! மனமுடைந்து கூறுகிறார். ஆனால், இவர் எங்கே போனார்? எதற்குப் போனார்? விபரம் இல்லை-கூறவில்லை. மயிலாடுதுறை, மாயூரமாகிப் பின்னர் மாயவரமாகிக் காட்சியளிப்பதைக் கண்டு கண்கலங்கி உளம்பதறும் இவர், மாயவரத்தை மயிலாடு துறையாக மாற்றும் பெரும்பணியைவிட மிகமேலான எந்தப் பணியைச் செய்து முடிக்க இவர் அவசர அவசரமாக எங்கே போனார்? போகும்போதுதான் அவசர வேலை—முடியவில்லை. திரும்பி வரும்போதாவது மாயவரம் புகைவண்டி நிலயத்தில் இறங்கி அந்த வேலையை முடித்துவிட்டு வரக்கூடாதோ? போகும்போதும் அவசர வேலை! திரும்பி வரும் போதும் அவசர வேலை. பாவம், மாயவரத்தை மாய்க்க அவரால் முடியவில்லை. எதை எல்லாமோ அழிக்கும் நம்மை அழைக்கிறார்.

உழைப்பு உன்னோடு இருக்கட்டும். ஊதியம் என்னோடு இருக்கட்டும் என்று பேசுகிறார் இந்தப் பெரியவர்—வயதிலும்.

தமிழுக்கு ஆபத்தென்றால் தலை மறைவாகத் திரிபவர்கள், இப்பொழுது தலைதூக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

தாங்கள்தான் தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள்—செய்பவர்கள் என்று தலைகால் தெரியாமல் பேசுகிறார்கள்.

தமிழின் பெயரால் அரசாங்கம் ஏதாவது மரியாதை செய்யவேண்டுமென்றால், அதற்குரியவர்கள் நாம்தான் என்று நவில்கிறார்கள் இந்த நாவாணிபர்கள்.

ஏட்டிலே தமிழின்பத்தைக் காட்டியிருக்கிறேன், எடு ஐயாயிரம் என்று கேட்டுப் பெறுகிறார். நாட்டிலே தமிழ் நசுக்கப்படுகிறது. இவர் ஏட்டிலே, தமிழின்பம் காட்டித் தமிழை வளர்ப்பவன் நான், எனக்கே வழங்குக பரிசை என்று பச்சையாகக் கேட்டுப்பெறுவது போன்ற ஒரு நிகழ்ச்சி அண்மையில் சென்னையில் நடைபெற்றிருக்கிறது.

**யார் இவர்?**

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் வெளிப்படையாகக் கலந்துகொள்ள முடியவில்லையே என்ற வருத்தத்தை யார் தெரிவித்தாரோ,

கோயில்களில் தமிழில்தான் அர்ச்சனை மந்திரங்களை உச்சரிக்கவேண்டும் என்று அப்பரைக் கேட்டுக்கொள்ளும்படி யார் இளைஞர்களைக் கேட்டுக்கொண்டாரோ,

மாயவரத்தை மயிலாடுதுறையாக மாற்ற வேண்டுமென்று எதை எல்லாமோ அழிக்கும் நம்மை (திராவிட இயக்கத்தவரை) கேட்டுக்கொண்டாரோ,

அவருக்கேதான் டில்லி ஐயாயிரம் ரூபா பரிசும், சென்னை பொன்னுடையும் போர்த்தி, இவர்போலும் உண்டோ தமிழ்த் தொண்டர் என்று பாராட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட பாராட்டுதலை நான் தவறென்று கூறவில்லை. தமிழ்ப் பேணும் தகைசால் சான்றோருக்கு அரசாங்கமும் பொதுமக்களும் மதிப்புத்தர வேண்டும் என்பதை உண்மையாகவே வரவேற்பவன் நான். ஆனால் உண்மையான தமிழ்த் தொண்டன் மாய வரம்கேட்டுக்கொண்டிருக்

**ஒரு காரணம்!**

"நாம் சுதந்திரம் பெற்ற பின் வகுப்பு வேற்றுமை, ஜாதிப் பித்து இவற்றினால் அபாயம் அதிகரித்து வருகிறது. பொதுத் தேர்தலின்போது வகுப்பு அடிப்படையில் அபேட்சகர்களை நிறுத்தியது இதற்கு ஒரு காரணமாகும்"

—காமராஜர்

16-4-55

கிருன் ஒரு பக்கத்தில், இன்னொரு பக்கத்தில் போலித் தொண்டன் பொன்னுடைக்குள் நுழைகிருன். இந்த நிலை மாறவேண்டும். உண்மைத் தொண்டை உலகம் மதிக்கவேண்டும்—பாராட்ட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களில் நானும் ஒருவன்.

ஆபத்தென்ருல் அடுப்பங்கரைக்குள் போய் ஒளிந்துகொள்வதும், பாராட்டென்ருல் பறந்தோடிவருவதுமான நிலை இனி மேலாவது தமிழ் நாட்டில் ஏற்படக்கூடாதென்பதற்காகவே இதனை எழுதுகிறேன்—மற்றப்படி எனது அருமை நண்பர் சேது அவர்களைப் பற்றி வேண்டுமென்றே இப்படி எழுதுவதாக எவரும் எண்ணிவிடக்கூடாது — அவரும் எண்ண மாட்டார் நிச்சயமாக. எதை எல்லாமோ அழிப்பவர்கள் அவசியம் இதையும் எழுதுவார்கள் என்பது அவருக்கும் நன்கு தெரியும். தமிழின்பம் கண்டவராயிற்றே! இதனையா அறியமாட்டார்?

★

# இந்தி மொழிப் பித்தர்களுக்கு!

"இந்தியா ஒன்றுபட்டு வாழவேண்டுமானால் ஒருமித்த மக்கட்தொகுதியாக முன்னேற வேண்டுமானால் சிறு விஷயங்களில் நமக்குள் சச்சரவும், போட்டியும் நடப்பது தவருகும். போட்டிகள் இருந்து கொண்டே போனுல் இந்திய நாட்டின் சக்தி வளராது, குறைந்தே போகும்.

ஒரு குறிப்பிட்ட பாஷையைப் பேசுகிறவர்கள் தங்கள் பாஷையைக் கற்க வேண்டும் என்று மற்ருெரு சமூகத்தாரைப் பலாத்காரம் செய்வது அன்பு முறைக்கு மாறுபட்ட செயலாகும். அது வெற்றி பெருது. ஒரு சர்க்கார் புதிய வரி ஒன்றைக் கொடுக்கச் சொல்லலாம். கொடுக்க இஷ்டமில்லாதவர்களை வற்புறுத்தியும் வசூலிக்க முடியும். ஆனுல் ஒரு குறிப்பிட்ட புது பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்வது வெறுப்பிலும் துவேஷத்திலும் முடியும். இதை நமது பிரதம மந்திரி வெகு நன்ருக உணர்ந்திருக்கிருர். மற்றவர்கள்தான் சரியாக அறியவில்லை. பாஷைப் பிரச்னையில் ஒற்றுமையும் வெற்றியும் அடைய வேண்டுமானுல் அன்பு வழியே சரியான மார்க்கமாகும். நம்முடைய ஹிந்திப் பிரமுகர்கள் இதை உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அரசியல் சட்டத்தில் ஹிந்தி அமுலுக்கு வருவதற்காக ஒரு தேதியைக் குறிப்பிட்டிருப்பது உண்மை. திருத்த வேண்டுமானுல் அந்தக் கெடுவைத் திருத்த வேண்டுமேயொழிய அதை வைத்துக்கொண்டு மிரட்டுவது தவறு.

குழந்தைகளை ஹிந்தி படியுங்கள் என்று சொல்வது நியாயம். "நீங்கள் ஹிந்தி படித்தால் உங்களுக்கு மேல் உத்தியோகம் கிடைக்கும்" என்று ஆசை காட்டுவது சரி. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பே நான் சொன்னேன். "சுதந்திர இந்தியாவில் உத்தியோகங்களுக்குக் கஷ்டப்படுவீர்கள். இப்பொழுதே ஆரம்பியுங்கள். என்றைக்காவது நாம் சுதந்திர ஆட்சி பெறுவோம். இந்தியா முழுவதும் ஒரு ஆட்சியாகும். தனித்தனி சிறு நாடுகளாகப் பிளவுபட்டுப் போவதற்கு இனி இடமில்லை. ஹிந்தி படியுங்கள். பரீட்சை வேண்டாம். சும்மா படியுங்கள்" என்று வற்புறுத்தினேன். இதை ஒரு கூட்டத்தார் அப்பொழுது ஆட்சேபித்தார்கள். 'உத்தியோகம்' 'உத்தியோகம்' என்று எப்பொழுதும் எண்ணி எண்ணி ஆசைப்பட்ட கூட்டத்தார்களே ஆட்சேபித்தார்கள். காரியங்களைக் குந்தகப்படுத்திஞர்கள்.

> 18 ஆண்டுகளுக்கு முன் இந்தி மொழியைத் தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக்குவதன் வாயிலாக 1400க்கு மேற்பட்ட தமிழ் மக்களை சிறைக்கனுப்பியும் இருவரின் உயிரைக் குடித்தும் மகிழ்ந்த ஆச்சாரியார், இன்று, தம்முடைய போக்கை மாற்றிக் கொண்டிருப்பதைக் காண ஆச்சரியப்படுகிருேம். இந்திமொழி கட்டாயமானுல் என்ன நேரிடும் என்பதை, பதவியிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், "இனியும் நான் பதவிக்கா போகப்போகிறேன்" என்ற நினைப்பில் ஒருஅறிக்கையை வெளியிட்டுள்ளார். 'கல்கி' 'சுதேசமித்திரன்' முதலான தேசிய ஏடுகளில் வந்தபடி அதனை இங்கு வெளியிட்டிருக்கிருேம்—பாரதப் புதல்வர்களின் பார்வைக்காக.

இதையெல்லாம் எண்ணி இப்போது வருத்தப்பட்டுப் பயன் இல்லை. ஆனுல் இப்போதுபெரிய உத்தியோகங்களுக்கு அரசாங்கத்தில் பொறுப்புவாய்ந்த ஸ்தானங்களுக்கு அன்னிய பாஷையில், தமிழருக்கு அன்னியமான ஒரு பாஷையில்தான் எல்லா பரீட்சையும் செய்வோம். அதில் தேறியவர்களைத்தான் ஸ்தானங்களுக்கு எடுப்போம் என்று சொன்னுல் யாருக்குத்தான் கோபம் வராது. எனக்குமே கோபந்தான்.

தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியையும் படிப்பார்கள். தேறுவார்கள். எந்தப் பாஷையையுமே படித்துத் தேறுவார்கள். ஆங்கிலத்தையே படித்து எல்லாப் பெரிய உத்தியோகங்களிலும் தங்களையே தேர்ந்தெடுக்கும் அளவுக்குப் போட்டியில் தமிழர்கள் தேறியிருக்கவில்லையா? தமிழ்க் குழந்தைகள் ஹிந்தியைப் படித்துவிடுவார்கள். சந்தேகமில்லை. சந்தேகம் எதுபற்றி என்ருல், இன்னும் பால் குடிக்கும் பருவம் தீராத ஹிந்தி பாஷையாகிய குழந்தையைப்பற்றித்தான். ஹிந்தி பாஷையானது தற்போது பலவீனமான நிலையில் இருக்கிறது. ஆங்கிலத்துக்குச் சமம் இல்லை என்பதில் வியப்பில்லை.

**தமிழுக்கும் சமம் இல்லை.**

வங்காளி பாஷைக்கும் சமமில்லை, மராட்டி பாஷைக்கும் சமமில்லை. இந்த நிலைமையில் செய்யவேண்டிய கடமை என்ன? தமிழ்க் குழந்தைகளை மிரட்டுவது அல்ல. ஹிந்தி பாஷையை மிரட்டி அதைக்

## வரப்பெற்ருேம்

நறுமணங்கமழும் K. T. R. ஜவ்வாதி ஊதுபத்திகள் வரப்பெற்ருேம். கிடைக்குமிடம்:— K. T. R. பெர்ப்யூமரி இண்டஸ்டிரீஸ், விஜயபுரம், தஞ்சை மாவட்டம்.

கொஞ்சம் மேலே தூக்கவேண்டும். எல்லா விஷயங்களிலும் ஹிந்தி பாஷைமூலமே பரீட்சை செய்யும் அந்தஸ்துக்கு இன்னும் ஹிந்தி வரவில்லை.

தில்லி மக்கள் சபையில் ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துப் பேசினால், ஆங்கிலத்தில் பேசும்போது பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு முதல் ஓரளவு படித்த அங்கத்தினர்வரை சுருக்கமாகப் பேசி முடிக்கிறார்கள். விஷயத்தை ஐயமறச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால், ஹிந்தி பாஷையை உபயோகிக்கும்போது திரும்பத்திரும்ப ஒருமுறை சொன்னதைப் பன்முறை கூறி விஷயங்களை விளக்கித் துப்புரவாய்ச் சொல்லக் கஷ்டப்படுகிறார்கள். மொழியின் வறுமையும் வளர்ச்சிக் குறைவும், திட்டமான பொருளில் சொற்களைப் பிரயோகிக்கும வழக்கம் இன்னும் ஹிந்தியில் ஏற்படாமல் இருப்பதுமே இந்தக் கஷ்டத்துக்குக் காரணம். ஆனபடியினால் தமிழ்மக்களைப் பள்ளிக்கூடம் போகச் சொல்லுவது முதற் கடமை. பரீட்சையில் தேறவேண்டியது தமிழ்க் குழந்தைகள் அல்ல. ஹிந்தி பாஷையானது பரீட்சையில் முதலில் தேறியாகவேண்டும்.

இதனை எழுதியபோதிலும் மனக்கசப்புகூடாது. வெறுப்பு உதவாது. இந்திய முன்னேற்றத்திற்கும் இந்திய ஒற்றுமைக்கும் என்ன செய்யவேண்டுமோ அதைத் தமிழ் மக்கள் செய்யாமல் இருந்துவிடமாட்டார்கள் என்பதை நம்முடைய ஹிந்தி சகோதரர்களுக்குச் சொல்லுகிறேன்.

உத்திரப் பிரதேசத்தில் இருக்கும் மக்களிடம் போய் "தமிழ் மிக நல்ல பாஷை. ஆரிய நாட்டின் பண்பாடு நிறைந்துள்ள பழைய பாஷை. இதை நீங்கள் படித்துத் தேர்ந்தால்தான் உங்களுக்கு உத்தியோகம்" என்று சொன்னால் அவர்களுக்கு எப்படியிருக்கும்? உள்ளம் பதைக்கும் அல்லவா? நம்முடைய மலையாளத்துச் சகோதரர்களை எல்லாப் படிப்பு விஷயங்களிலும் தமிழில் பரீட்சை செய்து தேறச் சொன்னோமா? கன்னடஜில்லாவில் உள்ள மதி நுட்பம் கொண்ட மக்களுக்குத் தமிழில் [illegible] வேலைகள் கொடுக்கவில்லை[illegible] ஜனநாயகம் என்றால் கொடுமையல்ல. அட்டகாசம் அல்ல. நியாயமும், விசால உணர்ச்சியும் சேர்ந்து இலங்கவேண்டிய ஒரு தத்துவம். தனி ஒரு மனிதனும் சந்தோஷம் அடைய வேண்டிய அமைப்பு குடியரசு. பெரிய பெரிய மக்கட் தொகுதியைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை.

சாந்த முறையில் நடவடிக்கைகள் நடத்தினால் தேசிய பாஷை வெற்றி அடையும். வளர்ச்சியும் பெறும். ஆங்கிலத்தோடு போட்டி போடும்படியான சக்தியை இன்றில்லாவிட்டால் சில நாட்களிலாவது ஹிந்தி பாஷையானது பெறும். அவசரப்பட்டால் வழி அடைபட்டுப் போகும். ஹிந்தி பேசுவோர்களுக்கிடையிலேயே இந்த விதமான ஹிந்தி, அந்த விதமான ஹிந்தி என்று பிளவுகள் உடனே தோன்ற ஆரம்பிக்கும். காசி ஹிந்தி ஒரு விதமாக இருக்கும். அலகாபாத் ஹிந்தி இன்னொரு விதமாக இருக்கும். தில்லி ஹிந்தி மூன்றாவது விதமாக இருக்கும். இவற்றினுக்குள் தீராத போட்டி உண்டாகும்.

தமிழ், ஹிந்தி, வங்காளம் எந்த இந்திய பாஷையுமே அறியாத அன்னிய மேனாட்டு நிபுணர்களைத் தருவித்துப் பொறுப்பும் அதிகாரமும் அவர்களிடம் ஒப்புவிக்கிறோம் அல்லவா? எந்த ஒரு இந்தியப் பாஷையும் படிக்காத மேனாட்டு நிபுணர்கள் ஒருவர் பின் ஒருவராக அழைப்புப் பெற்று இந்தியாவுக்கு வந்து கொண்டுதானே இருக்கிறார்கள். இங்கிலையில் இந்தியாவில் பிறந்து, படித்து, பண்பும், கல்வியும் பெற்ற இந்திய மக்களுக்கு மட்டிலுமா தடை? இந்தத் தவறான நோக்கத்தை விட்டுவிட்டு குழப்பமுண்டாகும் இந்த யோசனைகளை உடனே நிறுத்திவிட வேண்டும்.

பரீட்சை முழுவதையுமே ஹிந்தியில் நடத்துவோம் என்றுசொல்லுகிறார்களே அதற்குத்தான் ஆட்சேபம். பரீட்சையின் பல அம்சங்களுக்குள் ஹிந்திக்காக ஒரு தனி எழுத்துப் பரீட்சையோ, அல்லது பேச்சுப் போட்டியோ வைத்து அதற்கு என்று ஒரு சில மார்க்குகள் வைத்தால் யாருக்கும் ஆட்சேபம் இராது. பரீட்சை முழுவதுமே எல்லா அம்சங்களிலுமே கேள்விகளும் விடைகளும் ஹிந்தியாகவே இருக்க வேண்டுமென்று சொல்லுவதுதான் பிசகு. ஜனநாயக தத்துவத்துக்கு விரோதம். ஒரு பிரதேசத்தாருக்குப் பட்சபாதம் செய்வதாகும்.

"மற்றவர்கள் உடலில் உன் உயிரை வைத்துப் பார், உன் உடலில் மற்றவர்கள் உயிரைவைத்துப் பார். அப்படிப் பார்த்தாயாகில் பின் கோபம் ஏது, வருத்தம் ஏது, வெறுப்பு ஏது" என்று ரிஷிகள் உபநிஷத்தில் சொன்னார்கள் அல்லவா? இதை நம்முடைய ஜனநாயகத் தலைவர்கள் பார்த்துப் படித்து அவசரப்படாமல் இருக்க வேண்டும்.

அரசியலுக்காக பாஷையா அல்லது பாஷைக்காக அரசியலா என்கிற கேள்வியை ஆராய வேண்டும். எந்த விஷயத்தை நிர்வாகம் செய்வதிலும் மக்களுடைய உணர்ச்சி வேகங்களை மறந்துவிடலாகாது. பிற்போக்கான தென் ஆப்பிரிக்க அரசாட்சியிலும்கூட ஆங்கில பாஷையைப் புறக்கணித்துவிட்டு டச்சு கலப்பான போயர் பாஷையையே அவர்கள் வற்புறுத்தவில்லை. அதைவிடவா நம்முடைய ஏகபாஷைப் பித்தர்களின் அவசரப் பைத்தியம் முற்ற வேண்டும்"

★

## 3009-பேருக்கு தூக்குத் தண்டனை

—[::]—

உதவி உள்நாட்டு மந்திரி ஸ்ரீ பி. என். தத்தார் லோக் சபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"சுதந்தரம் வந்த பின் கொலை, கொலையுடன் கூடிய கொள்ளைக் குற்றங்களுக்காக இந்தியாவில் மொத்தம் 3009 பேருக்கு மரண தண்டனைவிதிக்கப்பட்டிருக்கிறது."

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.